# மஸ்ஹருல் பலாஹ்

MAZHARUL FALAH | මස්හරුල් ෆලාහ්

06 முஹர்ரம் 1435 - 10 நவம்பர் 2013

# مزهر الفلاح

جامعة الفلاح العربية

ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி

JAAMIATHUL FALAH ARABIC COLLEGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

مزهر الفلاح

# மஸ்ஹறுல் பலாஹ்

# MAZHARUL FALAH

# මස්හරුල් ෆලාහ්

جامعة الفلاح العربية

## ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி

## JAAMIATHUL FALAH ARABIC COLLEGE


**KATTANKUDY-30100, SRILANKA**

**TEL : 0094-652245046 FAX: 0094-652246306 MOB : 0094-773526763**

**Email : jfalahac@yahoo.com Web : kattankudyfalah.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஹறுல் பலாஹ்

முஹர்ரம் 1435 நவம்பர் 2013


## மலர்க் குழு :

- இஸ்மாயீல் ஸப்னாஸ் (இதழாசிரியர்)
- கவிமணி MHM.புஹாரி (பலாஹி)
- அல்ஹாபிழ் MBM.பாஹிம் (பலாஹி)
- MHM.அனஸ்
- MSM.பயாஸ்
- AL.அப்துல் ஹபீழ்
- AM.அஸ்வர்
- MMA.நுஸ்ரி
- AJM.ஜப்றான்
- SA.அப்துல் பாஸித்
- ACM.ஹலீம்
- MNM.றஹ்மதுல்லாஹ்

## கணனி வடிவமைப்பு :

- MySoft-2U | Graphics Unit

  Tel : 077 55 214 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி ..

**கௌரவ அதிபர் சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் எம். ஏ. முகம்மது அப்துல்லாஹ் ஆலிம்.**

நமது ஜாமிஆ மாணவர்களது சிறப்பான ஆக்கங்களை தாங்கிய **மஷ்ஹறுல் பலாஹ்** எனும் ஒரு சஞ்சிகை வெளிவருவது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இதனை வெளியிடும் 2013ம் ஆண்டில் இறுதி வகுப்பில் பயிலும் மாணவர்களை வெகுவாக பாராட்டுகின்றேன்.

இந்த சஞ்சிகை மாணவர்களது திறமையையும் ஆற்றலையும் நமக்கு உணர்த்துகின்றது. நமது மாணவர்கள் அறபு மொழியில் மாத்திரமின்றி தமிழ் மொழியிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருப்பதனை காட்டுகின்றது.

இறுதி வகுப்பில் பயிலும் இம்மாணவர்கள் இவ்வருடம் மௌலவி பரீட்சைக்கு தோற்றவிருக்கின்றனர். ஆதிக பாடங்கள், மௌலவி பரீட்சைக்கு ஆயத்தம் செய்தல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் தமது ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் செலவிட்டு பெறுமதிமிக்க இச்சஞ்சிகையைச் சிறப்பாக தயாரித்துள்ள இவர்களது முயற்சி மெச்சத்தக்கது. இவர்கள் தமது நினைவாக இத்தகைய சஞ்சிகையை நமது பார்வைக்குத் தருவது முன்மாதிரியான ஒரு பணியாகும்.

போதிய நேரமின்மை, வளக்குறைவு போன்றவற்றுக்கு மத்தியிலும் இத்தகைய ஆக்கத்தை தந்துள்ளமை இவர்களது திறமையையும், ஆர்வத்தையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்கிறது. இது குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்து இவர்களது இம்முயற்சியை பாராட்டி எனது நல்லாசியையும், நல்வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

இந்த நல்ல முன்மாதிரியை ஏனைய மாணவர்களும் பின்பற்றி எதிர்காலத்தில் இது போன்ற சஞ்சிகைகளை தொடர்ந்து வெளிக்கொணர வேண்டுமென்று விரும்புகின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நமது நல்ல பணிகள் அனைத்தையும் அங்கீகரித்து அருள் புரிவானாக!

**எம். ஏ. முகம்மது அப்துல்லாஹ் ஆலிம்**

**அதிபர், ஜாமிஅதுல் பலாஹ், காத்தான்குடி,**

**01.10.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி..

**கௌரவ உப அதிபரும் காத்தான்குடி காழி நீதிபதியுமான அல்ஹாஜ் மௌலவி அலியார் (பலாஹி)**

கிழக்கிலங்கையின் காத்தமா நகரில் ஐம்பது ஆண்டுகளையும் கடந்து, பல் துறை சாதனைகளையும் புரிந்து, வெற்றி நடை போடும் பழமைவாய்ந்ததோர் அறிவுப் பாரம்பறியமாய் இன்றும் திகழ்கின்றது எமது ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரி.

இஸ்லாமிய ஷரீஆ கற்கை நெறிகளை முதன்மையாகக் கொண்டு, மாணவர்களது ஆக்கத்திறன்களையும், கலைத்திறன்களையும் வெளிக்கொணர்வதற்காக ஏனைய துறைசார் கற்கை நெறிகளையும் இணைத்திருப்பதன் மூலம் எமது ஜாமிஆ அன்றும், இன்றும் தனது மாணவர்களை நாடு போற்றும் எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், துறைசார் பட்டதாரிகளாகவும் உருவாக்கியுள்ளது. "அகிலத்தை அறிந்து அல்லாஹ்வை அறிவது எப்படி" என்ற நாமமிட்டு வெளிவந்த சஞ்சிகை இக்கலாபீட அதிபர் அவர்களது மூத்த புதல்வர் றஹ்மதுல்லாஹ் (பலாஹி) ஆக்கிய மிகப் பெறுமதியான நூலாகும். அது இலங்கைளிலும், இந்தியாவிலும் எமது ஜாமிஆவின் புகழை ஓங்கச் செய்திருப்பதனால் அதனை ஓர் எடுத்துக் காட்டாக குறிப்பிடுவதில் பெறுமையடைகிறேன்.

அத்தோடு ஆண்டுதோரும் விடுகை வருட மாணவர்களினால் சமர்பிக்கப்படுகின்ற ஆய்வு நூற்கள் இன்றும் எமது நூலகத்தில் காட்சி தருகின்றமை இங்கு பட்டம் பெற்று வெளியேறும் உலமாக்களின் அதி சிறந்த ஆற்றல்களை படம் பிடித்துக் காட்டுகின்றன.

2013 ஆம் ஆண்டு விடுகை மாணவர்கள் பல பெறுமதியான ஆக்கங்களை உள்ளடக்கிய இந்நூலை வெளியிடுவதையிட்டு அவர்களை பாராட்டுகின்றேன். மேலும், எமது இக்கலாபீடம் இன்னும் பல வெற்றிகளைப் பெற்று மறுமை நாள் வரை வேரூன்றிப் பயணிக்க பிராத்திக்கின்றேன்.

அஷ்ஷேய்க் அலியார் (பலாஹி)

உப அதிபர்,

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா ,மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர்,

காத்தான்குடி காழி நீதிபதி,

03.10.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி..

*ஜாமியா பணிப்பாளர் சபைத் தலைவர் அலஹாஜ் எம்.ஐ.ஏ. முஹ்யித்தீன் ஜே.பீ.*

காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ்அரபுக்கல்லூரி 1955 ஆம் ஆண்டு தொடக்கம் சன்மார்க்கக் கல்விப் பணியில் வெற்றிகரமாக நடைபோடுவதை யாவரும் அறிவர். இங்கு அரபு மொழி மாத்திரமன்றி பிற மொழிகளும் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சைக்கும், உயர்தரப் பரீட்சைக்கும் மாணவர்கள் தயார் படுத்தப்பட்டு இப்பரீட்சைகளில் சிறப்பாக சித்தி பெறுகின்றனர். இதன் காரணமாக பல மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலும் கல்விக் கல்லூரிகளிலும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

இஸ்லாமியத் துறை சார்ந்த கல்வியும் இங்கு சிறப்பாக வழங்கப்படுவதால் அல்-ஆலிம் ஆரம்ப, இறுதிப் பரீட்சைகளுக்கும் மாணவர்கள் தயார்படுத்தப்படுகின்றனர். இதன் காரணமாக பல மாணவர்கள் வெளிநாடுகளிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களிற் பயின்று பட்டம் பெற்று பலதுறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அறபு மொழியில் மாத்திரமின்றி தமிழ் மொழியிலும் எமது ஜாமிஆ மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளமைக்கு இந்த சஞ்சிகை சிறந்த சான்றாக திகழ்கின்றது. இந்த ஜாமிஆ பணிப்பாளர் சபைத் தலைவர் என்ற வகையில் மாணவர்களது இந்த ஆக்கத்தைப் பார்த்து மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த சஞ்சிகையை சிறப்பாக வழங்கியுள்ள 2013 ஆம் ஆண்டின் இறுதி வகுப்பு மாணவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இந்த முயற்சி தொடரவேண்டுமென்று விரும்புகிறேன்.

இறுதி வகுப்பு மாணவர்களையும், இச்சஞ்சிகையில் ஆக்கங்கள் படைத்துள்ள ஏனைய மாணவர்களையும் இதற்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கிய விரிவுரையாளர்களையும் பாரபட்டுகின்றேன்.

இந்த ஜாமிஆ தனது கல்விப் பணியில் வெற்றிகரமாகப் பயணிக்க பிராத்தித்து இச்சஞ்சிகைக்கு எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முஹ்யித்தீன் ஜே.பீ.**

**தலைவர், பணிப்பாளர் சபை, ஜாமிஅதுல் பலாஹ், காத்தான்குடி,**

**05.01.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி..

*கௌரவ பிரதம நீதிவான் அல்ஹாபிழ் என்.எம்.எம். அப்துல்லாஹ், மட்டக்களப்பு*

அல்லாஹ்வைப் புகழ்ந்து நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத்துக் கூறியவனாக முதற் கண் இந்த மஸ்ஹருல் பலாஹ் எனும் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைவதோடு நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

எந்த ஒரு கல்வியும் படைத்த இறைவனின் பெயர் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றபோது அது வெற்றியின் பாலான கல்வியாகத்தான் இருக்க முடியும் அதே போன்று எந்த ஒரு சஞ்சிகையும் படைத்த ரப்பின் பெயர் கொண்டு ஆரம்பிக்கப்படின் அது திறன்பட மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவே அமையும்.

எழுத்து முனைப் போராட்டம் என்பது அனைத்துப் போராட்டங்களிலிந்தும் வேறுபாடு கொண்டது. என்றும் நிலைத்திருப்பது. பாரிய ஆதாரமாகக் கொள்ளப்படுவது.

எனவே இவ்வாறான எழுத்து முனைப் போராளிகளால் வீசப்படுகின்ற ஒவ்வொரு பேனா வீச்சும் எம் அனைவரினதும் ஈடேற்றத்திற்கும் இறைதிருப்திக்கும் வித்திட வேண்டும் என வாழ்த்தி உரைக்கிறேன்.


நன்றி

அல்ஹாபிழ் என்.எம்.எம்.அப்துல்லாஹ்,

பிரதம நீதிவான், மட்டக்களப்பு.

30.10.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் இதயத்திலிருந்து..

இதயத்தில் மலர்ந்த மலரொன்றை இதழொன்றாய் வெளியிட துணை புரிந்த இறைவனுக்கு முதற்கண் புகழுரைத்து, சத்தியத்தூதகர் சன்மார்க்கப் போதகர் சாந்தி (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் குடும்பத்தினர், தோழர்கள், பின்தொடர்ந்தோர், அனைவரின் மீதிலும் ஸலவாத்து ஸலாம் உரைத்தவனாய்,

1954ம் ஆண்டு முதல் இன்று வரை பல்லாண்டு கால மார்க்கப்பணியை உலகெங்கும் வியாபித்திருக்கும் பலாஹ் என்னும் நந்தவனத்தில் மலர்ந்து மணம் வீசும் பல நூறு மலர்களிலே இதுவும் ஒன்றாய் மணம் வீசும் தருணமிது..

நீண்டதொரு இடைவெளியின் பின்னர் மாணவர் மன்றம் சார்பாக மாணவர்களின் பல்வேரு ஆக்கத்திறன்களை உள்ளடக்கி மலர் ஒன்று வெளியிடுவதானது எமது ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கலாசாலையின் மாணவர்கள் நாம் பெற்ற சிறப்பு மிகு வெற்றியாகும்.

இம்மலரை சிறப்பாக வெளியிடு வதற்கு ஆக்கங்கள் தந்துதவியவர்கள், ஆசிச் செய்திகளை வழங்கியவர்கள், பல்வேறு வகையிலும் ஊக்கமளித்த உஸ்தாதுமார்கள், இயக்குனர் சபை உறுப்பினர்கள், மலர்க்குழுவினர், டைப்பிங் வேளைகளில் என்னோடு இணைந்து செயற்பட்ட மாணவர்கள், புத்தக வடிவமைப்பினை சிறப்பாக செய்து தந்த MySoft-2U நிறுவனத்தினர் மேலும், இம்மலர் வெளியிடுவதில் பண உதவி செய்த அனைத்து சகோதரர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குறிப்பு :-** இம்மலரில் இடம் பெற்றுள்ள அனைத்து ஆக்கங்களுக்கும் அவற்றை ஆக்கியவர்களே பொறுப்பானவர்கள்.

**இஸ்மாயீல் ஸப்னாஸ், இதழாசிரியர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....


- அரபுக் கவிதை
- கிழக்கிலங்கையில் ஓர் அரபுக்கலையகம் - காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ்..
- இஸ்லாமும் ஊடகப் போரும்
- கட்டுச்சாதம் ஆயத்தமா
- நன்மையின் வெற்றியும் தீமையின் தோல்வியும்
- அபூபக்கர் எனும் மாநபித் தோழர் (கவிதை)
- வாசமில்லாப் பூ (சிறுகதை)
- இஸ்லாத்தை அழிக்க முற்படும் சியோனிச சக்திகள்
- முஸ்லிம்களின் மருத்துவ சாதனைகள்
- மரணம் வந்துவிட்டால்....(கவிதை)
- பொய் ஒரு சாபம்
- இனிய வாழ்விற்கு இயற்கை மருத்துவம்
- இறைநேசர் இதயம் (கவிதை)
- சமூகச் சீர்கேடுகளுக்கு இட்டுச் செல்லும் நவீன கலாசாரம்
- அர்த்தமான நேரங்கள்
- முஃதஸிலாக்கள் பற்றிய ஓர் ஆய்வு
- நாளைக்குத் தருகிறேன் (சிறுகதை)
- கண்டுபிடிப்புக்கள் (மினி தகவல்கள்)
- கண்ணிய நபியை என்ன பண்ணுகிறீர் (கவிதை)
- கிழக்கிலங்கையில் ஓர் அரபுக்கலையகம் - காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ்..
- கவித் தூறல்கள்........
- நாளைக்கு எங்களுக்கும் பெருநாள் (சிறுகதை)
- மனிதன் (கவிதை)
- புண்ணியம் செய்த புனிதர் (கவிதை)
- தாய்....(கவிதை)
- குர்ஆனில் கொசு (நுளம்பு) ஓர் அதிசயம்
- ஹைகூ.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



المحمد صفي بن فضل الدين

الصف الثاني

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## طالب العلم (البسيط)

اهلا بطالب علم الدين مجتهدا ... سهلا له كل حين دائما ابدا
قد حاز بين أناس وافر الفضل ... فانه نائب للرسل هم سعدا
فير فع الله من قدآمنوا وذوي ال ... علم مراتب خير فاقت العددا
العلم كنز عظيم حارس الأمم ... من الضلال وكل الشر مبتعدا
تضع الملآئك للطلاب اجنحة ... رضا بصنعتهم تدعو لهم احدا
والطير فى الجو والحيتان فى البحر ... تدعو لهم كرما والنمل طول مدا
والعلم يرفعه فى عزة عمل ... لولاه قدكان بحرا مائه جمدا
ياطالب العلم خذ خشية الله ... سرا علانية تنجح دنا وغدا
دثار علم هو التقوى وزينته ... خلق جسيم وفعل طيب حمدا
كم من ملازم علم باعه بدنا ... بئس المعاش معاشا عيثه فسدا
ياطالب العلم كن اورع العلما ... واخشع الناس فى الدنيا لأن تجدا
فوزا وفيرا وجودا فائق الحصر ... عندالاله هو الرزاق والمددا
العلم يعلو ولايعلى عليه ايا ... طالب علم وكن ارجى لك الرشدا


محمد امين بن عبد الغفور العالم المغفور له
الأستاذ بجامعة الفلاح العربية والاسلامية
فى كاتانكودى من شرق سريلنكا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கையில் ஓர் அறபுக்கலையகம்

# காத்தான்குடி
# ஜாமிஅதுல் பலாஹ்



காத்தான்குடி ஒரு தனி முஸ்லிம் நகரம். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாநகருக்குத் தெற்கே ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் இது அமைந்துள்ளது. இங்கு அறுபத்தையாயிரம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

இங்கு 1955ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி "மத்ரஸதுல் பலாஹ்" என்ற பெயரில் இந்த அறபுக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை காலி மாநகரில் பிறந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள அட்டாளைச்சேனையில் வாழ்ந்து மார்க்கப் பணி செய்த பேரறிஞர் மர்ஹூம் அல்லாமா மௌலானா அப்துல்லாஹ் ஆலிம் ஸாஹிப் அவர்கள் இக்கல்லூரியை ஆரம்பித்துவைத்தார்கள்.

இக்கல்லூரியில் முதல் அதிபராக காலியைச்சேர்ந்த மர்ஹூம் மௌலவி ஏ.அஹ்மத் ஆலிம் ஸாஹிப் அவர்களும் அவர்களின் பின் அக்குறணையைச் சேர்ந்த மர்ஹூம் மௌலவி எம்.ஏ.எம். ஜே.ஸைனுல் ஆப்தீன் ஆலிம் ஸாஹிப் அவர்களும் கடமையாற்றினார்கள். காத்தான்குடியின் மூத்த உலமாக்களில் ஒருவரான மர்ஹூம் எஸ்.எம்.எம்.முஸ்தபா (கப்பல் ஆலிம்) அவர்கள் பல வருட காலம் இங்கு உப அதிபராகக் கடமையாற்றினார்கள்.

தற்போதைய அதிபராக தென் இந்தியாவின் அதிராம் பட்டினத்தைச் சேர்ந்த மௌலானா மௌலவி அல்ஹாஜ் எம்.ஏ.முஹம்மது அப்துல்லாஹ் (றஹ்மானீ) "ஷைகுல் பலாஹ்" அவர்கள் 1959ஆம் ஆண்டு முதல் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களது அயரா முயற்சியினாலும், தன்னலமற்ற சேவையினாலும் இக்கல்லூரி பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இங்கு பயின்று வெளியேறிய எல்லா மௌலவிகளும், ஹாபிழ்களும் இவர்களிடமே பயின்று பட்டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மௌலவித் தராதரப்பத்திரம் வழங்குவதற்குத் தகுதியான ஓர் அறபுக்கல்லூரியாக 17.11.1959 இல் இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சினால் இக்கல்லூரி அங்கீகரிக்கப் பட்டது. 1959ஆம் ஆண்டு இங்கு விடுதி வசதி ஏற்படுத்தப்பட்டது. இதனால் இங்கு கல்வி பயில்வதற்கு வெளியூர் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா 18.01.1962இல் நடைபெற்றது. அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்களை உருவாக்கும் நோக்குடன் 18.12.1971இல் இங்கு அல்குர்ஆன் மனன வகுப்பு தொடங்கப்பட்டது.

தென் இந்தியாவின் காயல் பட்டினத்தைச் சேர்ந்த மர்ஹூம் மௌலானா மௌலவி ஹாபிழ் ரீ.எம்.கே.செய்யித் அஹ்மத் (முத்துவாப்பா) ஆலிம் ஸாஹிப் அவர்கள் இவ்வகுப்பை ஆரம்பித்து வைத்தார்கள். இதன் முதலாவது பொறுப்பாசிரியராக சம்மாந்துறையைச் சேர்ந்த மௌலவி ஹாபிழ் ஏ.ஹஜ்ஜி முஹம்மது அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதில் பயிற்சி பெற்ற முதலாவது தொகுதி ஹாபிழ்கள் 1975 இல் பட்டம் பெற்று வெளியேறினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இங்குதான் முதன் முதலாக ஹிப்ழு வகுப்பு தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்ரஸதுல் பலாஹ் என்ற பெயரில் இயங்கிவந்த இக்கல்லூரி 1983ஆம் ஆண்டு ஜாமிஅதுல் பலாஹ் என்னும் பெயரில் உயர் கலாபீடமாகத் தரமுயர்த்தப்பட்டது. இங்கு பயின்று 376 பேர் மௌலவி பலாஹீ பட்டம் பெற்றுள்ளனர். 361 பேர் ஹாபிழ் பட்டம் பெற்றுள்ளனர். இவர்களிற் பலர் அறபுக்கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும், பள்ளிவாசல்களில் இமாம்களாகவும், கதீப்களாகவும் பணிபுரிகின்றனர். மற்றும் பலர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறி உள்ளனர்.

இங்கு பட்டம் பெற்ற ஹாபிழ்களில் பலர் புனித மக்கா முகர்ரமாவிலும் மற்றும் பல முஸ்லிம் நாடுகளிலும் நடைபெற்ற சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளனர். இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள பள்ளிவாசல்களிலும், மாலைதீவிலுள்ள பள்ளிவாசல்களிலும் எமது ஹாபிழ்கள் றமழான் மாதத்தில் தறாவீஹ் தொழுகை நடத்துகின்றனர். இந்த ஜாமிஆவின் அனுசரனையுடன் "பலாஹ் குர்ஆன் மதரஸா" எனும் பெயரில் குர்ஆன் மதரஸா ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

இங்கு அல்-ஆலிம் பரீட்சைக்குரிய பாடங்களும், க.பொ.த. சாதாரணதர, உயர்தரப் பாடங்களும், உர்து கணினி போன்ற பாடங்களும் போதிக்கப்படுகின்றன. இக்கல்லூரியின் கிதாபுப்பிரிவில் 77 மாணவர்களும் அல்குர்ஆன் மனனப்பிரிவில் 59 மாணவர்களும் தற்போது பயின்று கொண்டிருக்கின்றனர். இங்கு விரிவுரையாளர்களாக 15 உலமாக்கள் கடமையாற்றுகின்றனர். பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்த அல்லாமா மௌலானா மக்சூத் அஹமத் அவர்களும் எகிப்து நாட்டைச் சேர்ந்த அல்லாமா அஹ்மத் அப்துல் ஹமீத் அவர்களும் இங்கு பேராசிரியர்களாக கடமையாற்றியுள்ளனர். காத்தான்குடியைச் சேர்ந்த பிரமுகர்களைக் கொண்ட ஒரு குழுவினால் இக்கல்லூரி நிருவகிக்கப்படுகின்றது.

ஒரு வருடத்தில் அரையாண்டுப் பரீட்சை, வருட இறுதிப்பரீட்சை என இரண்டு பரீட்சைகள் இங்கு நடைபெறும். வருட இறுதியில் மௌலவிப்பரீட்சை நடைபெறும். வேறு அறபுக்கல்லூரிகளில் கடமையாற்றும் விரிவுரையாளர்களைக் கொண்டு மௌலவிப்பரீட்சை நடாத்தப்படும். அரையாண்டுப் பரீட்சையும் வருட இறுதிப்பரீட்சையும் இங்குள்ள விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.

இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மாணவர் மன்றக் கூட்டம் நடைபெறும்.

றமழானுக்காக ஒன்றரை மாதமும் ஹஜ் பெருநாளுக்காக 15 தினங்களும் புனித த.ஃவத் தப்லீகுடைய பணிக்காக 20 தினங்களும் விடுமுறை வழங்கப்படும்.

இந்த ஜாமிஆ ஒரு கல்வி நிறுவனமாக மட்டுமல்லாது சமூக சேவை நிலையமாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.


இப்பகுதியில் சூறாவளி, சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்பட்டபோதும், கலவரங்களால் பாதிப்புக்கள் நிகழ்ந்த போதும் இந்த ஜாமிஆவின் இயக்குநர்களும், உஸ்தாதுமார்களும், மாணவர்களும் மக்கள் துயர் துடைக்கும் பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மகத்துவமிக்க மார்க்கக் கல்விப்பணியில் 57 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இந்த ஜாமிஆவுக்கு இன்னும் பல முக்கிய தேவைகள் உள்ளன. வருவாய் போதாமை காரணமாக நிரந்தர வருவாயைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் படுகின்றன. இம்முயற்சிகள் கைகூடுவதற்கு வசதிபடைத்த பெருமக்களின் உதவிகள் தேவை.

எனவே இந்த சன்மார்க்கக் கலையகத்துக்கு என்றென்றும் உதவி நல்கி வல்ல அல்லாஹ்வின் நல்லருளைப் பெற்றுக் கொள்வோமாக. ஆமீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் என்ற மரம் இவ்வுலகில் வேரூன்றி வியாபித்து விருட்ஷமாக ஓங்கி நிற்கின்றது. 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அரேபியாவிலே இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் வித்திடப்பட்டது. அல்லாஹ்வின் உதவியினால் நபிகளாரும் சஹாபாக்களும் மேற்கொண்ட ஒப்பற்ற முயற்சியினாலும் தொடர்ந்து வரும் எம் சமூக நல்லோர்களினாலும் அசைக்க முடியாத ஆணிவேரிட்டு இன்னும் வளர்ந்து கொண்டே செல்கிறது. எனினும் இஸ்லாத்தின் எதிரிகளினால் அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு முயற்சிகளும் சூழ்ச்சிகளும் தொடர்ந்து கொண்டே வருகின்றன. அவ்வாறான சூழ்ச்சியாகவும் இஸ்லாத்தை வேரறுப்பதற்கான ஆயுதமாகவும் இன்று நவீன ஊடகங்கள் கையாளப்படுகின்றன.



# இஸ்லாமும் ஊடகப் போரும்

- Ismail Safnas, Last Year

ஊடகம் என்பது "வலுவுள்ள ஒரு கருத்தை வலுவற்றதாகவும் வலுவற்ற ஒரு கருத்தை வலுவானதாகவும் மாற்றுகின்ற மாபெரும் சக்தியாகும்." இது பல்வேறு கிளைகளைக் கொண்டு வியாபித்துக் காணப்படுகின்றது. நாளந்த பத்திரிகையில் தொடங்கி வாராந்த மற்றும் மாதந்த இதழ்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக் காட்சி, இணையம் என்று கூறிக் கொண்டே செல்லலாம். இவைகள்தான் வியாபித்து விரிந்த உலகை விரல் நுனியில் தந்திருக்கின்றன.

ஊடகமானது இன்றைய நவீன உலகில் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு காலத்தில் பல நாட்கள் கடந்து கைக்கு வந்த தகவல்கள் இன்று சில வினாடிகளில் கிடைக்கின்றமைக்கு ஊடகமே வழிகோலு கின்றது. அது மட்டுமின்றி ஊடகம் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்ற போது ஒரு நாட்டின் அல்லது ஒரு சமுதாயத்தின் நிறை குறைகளை மக்கள் மத்தியில் கொண்டு வந்து விழிப்பூட்டல் களை மேற்கொண்டு ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்வுகளைப் பெறுவதற்கும் ஊடகத்துறை பெரும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே ஒரு நாட்டினுடைய வெளி இறைமை கூட ஊடகத்தொடர்பாடல் மூலமாக பாதுகாக்கப்பட்டு அந்நாட்டு மக்கள் நல்லாட்சியையும் சுதந்திரமான காற்றையும் சுவாசிப்பதற்கும் ஊடகம் தனது பங்களிப்பை ஆற்றி வருகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக அமெரிக்கா வின் ஈராக் மீதான தாக்குதலைக் குறிப்பிட முடியும். மனித உரிமை என்று வாய் நிறைய முழங்குகின்ற அமெரிக்கா, மனித நாகரிகத்தை அசிங்கப் படுத்துவதிலும் பின்நிற்பதில்லை. ஈராக்கின் எண்ணை வளத்தின் மீது மோகம் கொண்ட அமெரிக்கா ஈராக் மீது பல்வேறு பொய் குற்றசாட்டுகளை சுமத்தி எண்ணை வளத்தை சுவீகரிக்க முயன்றது. எனினும் ஐ.நா. சபை மேற்கொண்ட ஆய்விலே அமெரிக்காவின் திரை கிழிக்கப்பட்டு, அதன் கேவலமான சிந்தனைகள் முழு உலகிற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன. தன் முயற்சியில் தோற்றுப்போன அமெரிக்கா அத்தோடு நிறுத்தி விட வில்லை.

தனது தனிப்பட்ட அதிகாரத் தினை பயன்படுத்தி ஈராக் மீது தாக்குதல் களை ஆரம்பித்தது. தான் ஈராக் மீது மேற்கொள்ளப்போகும் அசிங்கமான அடாவடித்தனங்களையும் மனித உரிமை மீறல்களையும் வெளியுலகிற்கு தெரியாமல் மறைப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்ட முதல் நடவடிக்கை ஈராக்கின் "தகவல் தொடர்பாடல் கட்டடத்தில்" ஏவுகனைகளை தூதுவிட்டு தாக்கியதாகும். அத்தோடு நின்று விட வில்லை எமது புனித பூமியான பலஸ்தீனிலும் இக்கொடூர செயல்கள் அரங்கேற்றப்படுகின்றன. எனினும் பெரும்பாலும் அவை வெளியுலகிற்கு வருவதில்லை. காரணம், பலஸ்தீனத்தின் ஊடகத்துறை இஸ்ரேலினால் முடக்கப்பட்டி ருப்பதாகும்.

இவ்வாறான உதாரணங் களை அடுக்கி கொண்டே செல்லலாம். இவைதான் இன்றைய உலகின் ஊடகத்துறை முக்கியத்துவமாக உணரப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்துறையின் முக்கியத்துவத்தினையும் பயன்பாட்டினையும் உணர்ந்த இஸ்லாத்தின் எதிரிகள் ஊடகத்தை முற்றிலும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக கட்டவிழ்த்து விட எத்தனிக்கின்றனர். இதற்காகவே பல்வேறு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. முஸ்லிம் களுக்கு எதிரான பொய் வதந்திகளை கட்டவிழ்த்து விடுவதிலும் அவர்கள் பின் நிற்கவில்லை. இன்று ஊடகங்கள் மேற்கொள்ளும் அடிப்படை விடயம் யாதெனில் ஒரு மாற்று மதத்தவன் தவறு செய்தால் அது அவனோடு மாத்திரம் சாடப்படுவதும், அதே தவறை அல்லது குற்றத்தை ஒரு முஸ்லிம் செய்து விட்டால் அதனை இஸ்லாத்தோடும் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தோடும் இணைக்கப்படு வதுமாகும். இதன் விபரீதமாகவே இன்றைய ஊடகங்களில் "முஸ்லிம் தீவிரவாதி" "இஸ்லாமிய அடிப்படை வாதிகள்" என்ற வார்த்தைப் பிரயோகங்களைக் காண்கிறோம், மனவேதனை அடைகின்றோம், எம்மால் என்ன செய்ய முடிகிறது? முஸ்லிம் தலைமைகளும் முக்கியஸ்தர்களும் பொதுவாக ஒவ்வொரு முஸ்லிமும் சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இன்றைய உலகின் ஒட்சிசன் போல் உலா வருகின்ற இணையத்தளங்களிலும் இஸ்லாத்திற்கெதிரான கருத்துக்கள் தொடர்ந்த வண்ணமே காணப் படுகிறன. Answering Islam போன்ற இணையங்கள் இதற்கு சான்று பகர்கின்றன. இஸ்லாத்தின் அடியொட்டி வாழ்ந்த உத்தமர்கள் ஊனப்படுத்தப்ப டுவதும், இஸ்லாத்தை உதறித் தாள்ளியவர்கள் இஸ்லாமிய கொள்கை வாதிகளாக வும் புரட்சிக் காரர்களாகவும் வர்ணிக்கப்பட்டு மறைமுக மாக இஸ்லாம் இம்சிக்கப்படுகின்றது. மிகப் பெரும் ஊடகமான பாடசாலை பாடப்புத்தகங்களில் "சரணடைய மாட்டேன் சாவை சலனமின்றி ஏற்றுக் கொள்வேன்" என்று கூறி தன் உயிரையும் இஸ்லாத்திற்காய் மாய்த்துக் கொண்ட இந்திய ஆட்சியாளர் திப்பு சுல்தான் மறைக்கப்பட்டு, இஸ்லாமிய கொள்கைகளை தமக்கு சாதகமாக மாற்றி ஆடம்பர வாழ்கை வாழ்ந்த அக்பரையும் ஷாஜகனையும் பிரஸ்தாபிக்கப்படுகிறன.

இஸ்லாத்தின் இமயம் தொட்ட வளர்ச்சியையும் முஸ்லிம்களின் முன்னேற்றத்தையும் கண்ட விரோதிகள் இத்தோடு நின்று விட வில்லை (Media) மீடியாக்களை தம்வசம் வைத்துக் கொண்டு திரைப்படங்களினூடாகவும் இஸ்லாத்தை இம்சிக்கின்றனர். தற்காலத்தில் வெளிவந்த "துப்பாக்கி" "விஸ்வருபம்" போன்ற திரைப்படங்கள் முஸ்லிம்களை தேசிய மற்றும் சர்வதேச தீவிரவாதிகளாக சித்தரிக்கின்றன. திரைப்படங்கள் மற்றும் சின்னத் திரைகளினூடாகவும் இஸ்லாமிய அடிப்படை சிந்தனைகளும் வேட்டையாடப் படுகின்றன. "பர்தா பாதுகாப்பு என்கிறது இஸ்லாம்" இல்லை பழமை வாதம் என்கிறது ஊடகம். பர்தா அவலட்சனமான பெண்கள் தமது முகத்தை மறைப்பதற்காக அணிவதாகவும் மனித மனங்களில் படம் போட்டு காட்டுகிறது. சில வேளைகளில் சில்லறைகளுக்கு தலை சாய்க்கின்ற முஸ்லிம்களைக் கூட இதற்கான ஆயுதமாக பயன்படுத்துகின்றனர். தஸ்லிமா நஸ்ரீன் என்ற முஸ்லிம் பெயர் தாங்கி அமெரிக்காவின் கை பொம்மையாக மாறிய இவ்வெழுத்தாளரைப் பயன்படுத்தி (Freedom of Adultry) கற்பப் பை சுதந்திரம், (Lajja) வெட்கம் போன்ற இஸ்லாமிய சிந்தனைகளுக்கு எதிரான நூல்கள் வெளியிடப்பட் டுள்ளன. சல்மான் ருஸ்டியும் இவ்வாறான எழுத்தாளராகவே காணப்படுகிறார்.

இவ்வாறாக, ஊடகங்களின் இஸ்லாத்திற்கு எதிரான தாக்குதல்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணங்களில் இன்னுமொன்று இவ்வாறான சந்தர்ப்பங்களில் பதில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு முஸ்லிம்கள் பின் நிற்பதும், ஊடகத்துறையில் முஸ்லிம்கள் பின்தங்கியிருப்பது மாகும். இதற்கான காரணங்களை சுருக்கக் கூறின் பிற மொழிகளைக் கற்பதில் ஆர்வமின்மை, Media க்கள் தொலைகாட்சிகளை எவ்வாறு நல்வழியில் பயன்படுத்தலாம் என்ற தெளிவில்லாமல் ஒட்டு மொத்தமாக அவற்றை பயன்படுத்துவது தடுக்கப்பட்டது (ஹராம்) என்று மார்க்க விளக்கம ளித்தல், இஸ்லாமிய பிரச்சாரங்கள் குறிப்பிட்ட வட்டத்திற்குள் சுருக்கப்படுதல், தான் உண்டு தன் வேளையுண்டு என்ற முஸ்லிம்கள் பலரின் பிற்போக்கான சிந்தனைகளை குறிப்பிடலாம்.

எனவே ஊடகங்களின் மூலம் இஸ்லாத்தை வளர்க்கவும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான கருத்துக்களுக்கு தக்க பதில் வழங்கவும் இத்துறையில் நாம் இமையம் தொட வேண்டியது காலத்தின் தேவையாகும். எமது முஸ்லிம்களை சிறந்த எழுத்தாளர்களாகவும் ஆக்கத்திறன் கொண்டவர்களாகவும் மாற்றுவதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியத்தை எம் சமூகம் வேண்டி நிற்கின்றது. நாம் இத்துறையில் கரை காண வேண்டுமானால் எம் சமூகத்தை கல்வியில் முன்னேற்ற வேண்டும் அதற்கான விழிப்பூட்டல்களை ஊக்குவிப்புக்களை தொடர வேண்டும், இதழியல் மற்றும் மொழியியல் துறைகளில் முன்னேற்றம் வேண்டும், தொலைக் காட்சி வானொலி அலைவரிசை களை எவ்வாறு நல்வழியில் பயன் படுத்தலாம் என்ற தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக குறுந்திரைப் படங்களின் மூலம் இஸ்லாத்தையும் அதன் சிந்தனைகளையும் தெளிவு படுத்த வேண்டும், அதிலும் முக்கியமாக இன்றைய வெள்ளி மேடைகளில் (மிம்பர்) காலத்தின் தேவை கருதி குத்பாக்கள் அமையப் பெற வேண்டும். ஏனெனில் அன்று முதல் இன்று வரை இதுவே முஸ்லிம்களின் மிகப் பெரும் ஊடகமாக திகழ்ந்து கொண்டிருக் கிறது.

எனவே முஸ்லிம்களாகிய நாம் எமது மார்க்கத்தை தூய வடிவில் பாதுகாத்து பல கோடி நன்மை பெற முன்வருவோமானால் ஊடகத் துறையில் மட்டுமல்ல எத்துறையானாலும் அத்துறையில் வெற்றி நடை போடுவது எம் சமூகமே என்பது நிச்சயம்.

---

## கட்டுச்சாதம் ஆயத்தமா?

சுழலும் பூமியின் வேகத்தில் சுருங்கிப்போன இன்றைய நம் வாழ்வில் நாளைக்கென்று என்னவெல்லாம் சேர்க்கிறோம்!!! ஆனால் நாளை மறுமைக்காய் என்ன சேகரித்திருக் கிறோம் என எப்பொழுதாவது சிந்தித்த துண்டா? பின்வரும் வினாக்களுக்கு உங்களது விடை என்ன?

01. நீங்கள் ஒரு பிரயாணியாக இருக்கின்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

02. மீண்டும் திரும்பிவர முடியாத ஓர் இடத்திக்குப் பயணித்துக் கொண்டிருக் கின்றீர்கள் என அறிவீர்களா?

03. அப்படியாயின் பிரயாணத்துக்குத் தேவையான அங்கு சென்றவுடன் உபயோகமாகும் பயணப் பொதியை தயார் நிலையில் வைத்துள்ளீர்களா?

04. ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மாறுகையில் தங்கிச் செல்லும் தரிப்பிடமான கப்ரில் உங்கள் தனிமையைப் போக்கக் கூடிய சாதனங்களை சரிபார்த்துக் கொண்டீர்களா?

05. உலகில் நீங்கள் எத்தனை வருடங்கள் வாழ்ந்துள்ளீர்கள்? அதில் இறைவனின் கட்டளைப்படி அவன் திருப்தியைப் பெறுவதையே இலக்காகக் கொண்டு வாழ்ந்துள்ள நாட்கள் எத்தனை?

06. நீங்கள் செய்யும் எந்தவொரு கருமத்திற்கும் ஒரு முடிவு உண்டு. அம்முடிவு உங்களை சுவனத்துக் குரியவராக அல்லது நரகிற்குரியவராக ஆக்கிவிடும் என்பதை உணர்வீர்களா?

07. நீங்கள் வீண்விளையாட்டிலும் கேளிக்கைகளிளும் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் நேரமாகப்பார்த்து உயிரை எடுக்கும் மலக்கு உங்களிடம் வந்துவிட்டால் எப்படியிருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்ததுண்டா?

08. பயங்கரமான அந்த மறுமை நாளைப்பற்றி எண்ணிப் பார்த்தீர்களா?

09. உங்களுக்காக, உங்கள் குடும்பத்துக் காக என்று நீங்கள் ஓடியோடிச் செய்தவையெல்லாம் எங்களது இவ்வுலக வாழ்வுக்காகவா? மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்வுக்காகவா?

10. உங்களது வாழ்வின் கடைசி மணித்தியாலம் எப்படி இருக்கும்?

11. உங்கள் அமானிதங்களை - குடும்பம், பிள்ளைகளை எந்த நிலையில் விட்டுச் செல்லப்போகிறீர்கள்? அமானிதத்தின் சொந்தக்காரன் கேட்கப் போகும் கேள்விகளுக்கு உங்களிடம் நல்ல பதில் இருக்குமா?

12. மரணம் வந்து விட்டது. சொல்லொ ண்ணா வேதனையுடன் உடலை விட்டு ஆன்மா பிரிந்து விட்டது. நீங்களும் மற்றவர்களால் குளிப்பாட்டப்படுவீர்கள். உங்களது ஜனாஸாத் தொழுகைக்காக உங்களை நான்கு பேர் தோளில் சுமந்தபடி பள்ளிவாயலுக்கு கொண்டு செல்வர். அதன் பிறகு மறுமை வாழ்வின் முதல் படியாகிய கப்றுக்கு கொண்டு செல்வர். அது ஒருவருக்கு சுவனத்தின் ஒரு பூஞ்சோலையாகலாம் அல்லது நரகத்தின் படுகுழியாயிருக்கலாம். உங்களுக்கு அது தெரியுமா..? **- AM.Aseefar, Last Year**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மையின் வெற்றியும் தீமையின் தோல்வியும்

- Mohamed Fayas, Last Year

இவ்வுலகிலே அல்லாஹு"த்தஆலா, நல்ல சிறந்த அவனுக்கு மிகவும் நேசமான மனிதர்களைப் படைத்து அந்த மனிதர்கள் அவனைப்பற்றியும் இவ்வையகத்தில் அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பது பற்றியும் மனிதர்களுக்கு எடுத்துரைப்பதற்காக வேண்டி அவனது தூதர்களை அனுப்பிவைத்தான். இந்த தூதர்கள் வரிசையில் வந்தர்கள் தான் எங்கள் நாயகம் (ஸல்) அவர்களாவார்கள். நபிமார்களுக்கு அல்லாஹு"த்தஆலா இறக்கிய வேதங்களிலும் மிகவும் பரிசுத்தமான முக்கியமான நூலான அல்-குர்ஆனை கொடுத்து அதில் உள்ள வாழ்கை நெறிகளை எடுத்து சொல்லுமாறும் பனித்திருக்கின்றான். அவர்களது வாழ்க்கை வழிமுறைகளைத் தம்முடைய அனைத்து விடயங்களிலும் உத்தம ஸஹாபாக்கள் எடுத்து நடந்தார்கள். எந்தளவுக்கெனில் நபி (ஸல்) அவர்களது ஏவலை பின்பற்றி அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை அடைவதற்கு போட்டி போட்டுக் கொண்டும் முந்தியடித்துக் கொண்டும் இருந்தார்கள். “ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஏழை மக்கள் வந்து செல்வந்தர்கள் ஸதகா கொடுக்கின்றார் ஆனால் எங்களிடத்தில் கொடுக்க ஏதும் இல்லை என சென்னார்கள் அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு பர்ளுத் தொழுகைக்குப் பின்னாலும் முப்பது முறை சுப்ஹானல்லாஹ் அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹு"அக்பர் என்று சொல்லி வாருங்கள், அது ஸதகாவுக்கு ஈடாகும் என சொன்னார்கள்”. (அல் ஹதீஸ்)

இவ்வாறு உத்தம ஸஹாபாக்கள் “நலவின் பக்கம் முந்திக் கொள்ளுங்கள்” என்ற அல்-குர்ஆன் வசனத்தைத் தழுவி அவர்களது வாழ்நாள் முழுவதையும் நல்லமல்களின் பக்கமே செலவலித்து “றழியல்லஹு" அன்ஹு"ம் வருளு அன்ஹு"” எனும் துஆவையும் பெற்று இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றி பெற்றவர்களாக திகழ்கின்றார்கள். இவர்களைப் போன்று தான் தாபியீன்கள் தப்உ தாபியீன்கள் அவர்களது வாழ்நாள் முழுவதும் அமுல் படுத்தி வந்தார்கள். இவ்வாறான நன்மையான விடயங்களில் தான் நிச்சயமாக வெற்றியுள்ளது என்றால் மிகையாகாது. ஆனால், இக் கால கட்டத்தில் வாழ்கின்ற எமது சமூகம் நபி (ஸல்) அவர்களின் ஏவலை மறுத்து புறக்கணித்து தன்னிச்சையாக செயற்பட்டு கொண்டிருக்கிறது. இதனால் அவர்கள் பெரும் நஷ்டவாளர்களாகவும் அல்லாஹ்வை விட்டும் தூரமானவர்களாகவும் இருக்கிறார் கள். மேலும் அல்லாஹ் விலக்கிய பெரும் மோசமான பாவங்களை மிகவும் இலகுவாக செய்தும் விடுகிறார்கள். இதனை செய்வத னூடாக பெரியதொரு இழப்பை சந்திக்க நேரிடுகின்றது. அவ்வாறான பாவங்கள் மற்றும் தீமைகள் உள்ள விடயம் தான் நன்மையையும் பொருளையும் அழிக்கக் கூடிய வட்டி ஆகும்.

இதனைப் பற்றி அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான் “வட்டி அழித்துவிடும் ஸதகா வளர்த்துவிடும்” என்று இப்பொழுது இஸ்லாம் வட்டிக்கு பதிலாக பல மாற்று வழிகளை செய்திருந்தும் இந்த குருட்டுத்தனமான மக்கள் அதன் பக்கமே விரைகின்றார்கள். ஏன் இந்த கொடூரமான தீமையினூடாக ஏற்படுகின்ற விளைவுகளையும் தண்டனை களையும் அறியாததனால்தான் “நபி (ஸல்) வட்டியானது விபச்சாரம் செய்வதை விட பெரும் பாவமாகும் என அருளினார்கள்” இதனைத் தொடராக செய்து வருவதனால்

(தொடர்ச்சி 20ம் பக்கம்) 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூபக்கர் எனும் மாநபித் தோழர்


சூரியனாய் வந்தீரே – இவ்வையகம்
தீன் என்ற சுடர் ஒளியை தந்தீரே
சீரற்ற மானிடரை – நபியே
சீர் செய்ய வந்தீரே.......
உம் விதையில் பூத்த ரோஜாவே
அபூபக்கர் என்ற உம் நண்பரே!
மல்லிகை பூ போல் – வாசத்தால்
தீனைப் பரப்பியவரே!

தீன் என்ற சிற்பிக்குள் முத்தாக நுழைந்தவரே
அபூபக்கர் என்ற பெரும் மனிதரே!
உண்மைக்கு முதலிடம் – அது
எங்கள் அபூபக்கரிடம்..
பொய்மைக் கரியாக்கி
உண்மையை எரியவைத்து
சித்தீக் எனும் நாமம் பெற்றவரே!

ஹிஜ்ரத்தின் போது நபியை
ஹிஜ்ரில் வைத்த உத்தமரே நீரே!
பாச நபியை பாதுகாக்க – பாசத்தால் விழித்தவரே!
நபியவரின் நேசரே!
மானிடரின் மா மேதையே!
எங்களின் முன் மாதிரியே அபூபக்கர் எனும் வல்லவரே!
உம் வாழ்வு எம் வாழ்வில் வர
பிரார்த்திக்கிறேன் வேண்டுகின்றேன் நாயனிடம் .......

- Abdul Basith, Gread-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ஆ…அம்மா.."

"அய்யோ"…

"அல்லாஹ் மேல சத்தியமா சேர். நான் அந்த தப்ப செய்யல்ல.. நான் அந்த அளவுக்கு கொடூரமானவளுமில்ல. அல்லாஹ்"க்காக சேர்.. அடிக்காதீங்க சேர்.. வலிக்குது.. என்ட உம்மா.. சரி சேர் ஒத்துகிறேன்.. அந்த தப்ப நான் தான் செஞ்சன்."

பல விதமான அழுகை ஓலங்களின் பின் நபீலா குற்றப் பத்திரிகையில் கையொப்பமிடுகிறாள். கொலைக் குற்றம் சாட்டப்படுகிறாள்.

காலைநேரம்.. சவூதி அரேபியாவிலுள்ள தவாத்மி சிறைச்சாலை..

நபீலா தனது வழமையான கைத்தொழிலான பாய் பிண்ணுவதில் மும்முரமாக ஈடுபட்டுயிருக்கிறாள். ஆனால், அவளது சிந்தனையோ தனது கடந்தகால வாழ்வின் நிழல்களினுல் நுழைகின்றது.

"மாசிப் பக்கட்ட பேக்குக்க வெச்சாச்சா? அந்தப் பொட்டிய வேணுக்குள்ள வைங்க.. நபீலா பொறப்புட்டுட்டாலா?" ஒரே சலசலப்பு.. எங்கு திரும்பினும் உறவினர்கள், அயல் வீட்டார் என சன நெரிசல்.

"இனித்தான் இந்த குடும்பத்திற்கு நல்ல காலம் பொறக்குது.. நபீலா போய் குடும்பத்த காப்பாத்துவாள்" கூட்டத்தில் ஒரு மூதாட்டியின் வாய்ச்சொல்.

ஆம், நபீலா மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக பணி புரியச் செல்லும் நாள் அது.

கொழும்பிலுள்ள சர்வதேச விமான நிலயத்தில் நபீலா குடும்ப சகிதம் நிற்கிறாள். எண்ணிலடங்கா கண்ணீர் துளிகள் சிந்துகின்றன. நபீலாவின் தாய் மகளிடம், "புள்ள.. கவனமாபோ… சேர்ந்ததும் டெலிபோன் எடு… ஒடம்ப பார்த்துக்க புள்ள… எங்கட சொல்லயும் கேட்காம போறாய்… வேல கஸ்டம் என்டா நாட்டுக்கு வந்துடு…" பிரியா விடை வார்த்தைகளை தனது தாயிட மிருந்து கேட்டவளாக தனது தாயை முத்தமிட்டுவிட்டு விடை பெறுகிறாள்.

தமது மகளின் முகத்தை இனிமேல் பார்க்க முடியாது என அவளது தாயாரின் உள்ளம் ஏற்கனவே அறிந்து விட்டது போல… கடைசியாக கண்ணீர் மல்கிய கண்களால் தனது மகளின் முகத்தைப் பார்க்கிறால் ஜெமீலா.. பெருமூச்சு விடுகிறாள்…

"முதல்ல கடன்கள அடச்சிட்டு ஒரு நல்ல வீடு கட்டனும்… தம்பி ஒரு நல்ல வேலை தொடங்குரதுக்கு கொஞ்ச காசி அனுப்பனும்… தங்கச்சி ரெண்டு பேரயும் நல்லா படிக்க வெச்சு சமூகத்தில பெரிய ஆக்கலாக்கனும், குடும்பத்தை ஒரு நல்ல நெலக்கி கொண்டு வரனும்." இவ்வாறு பல எண்ணங்களோடு கற்பனை உலகில் இருந்த நபீலாவை ஒரு ஆங்கில மொழியிலான அறிவுறுத்தல் தடுத்து நிருத்துகிறது.

டியர் பெஸன்ஜேர்ஸ்… ப்லீஸ் லிஸ்ன் தெ மெஸேஜ்… தெ ஜிடி 189 ப்ளைட் இஸ் நவ் எர்ரய்வின்ங் இன் றியாத் எயார் போட் -

(Dear passengers.. Please listen the massage..The GT189 flight is now arriving in Riyath Airport)

ஏயார்பேர்ட் என்ற சொல்லிலிருந்து விமானம் விமான நிலையத்தில் தரையிறங்கப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டாள் நபீலா…..

விமானமும் தரையிறங்குகின்றது. கனவுகள் நனவாகும் நாள் ஆரம்பித்து விட்டது என்ற பூரிப்புடன் இருந்த நபீலாவை குறித்த வீட்டுக்காரர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்று வீட்டில் சேர்க்கிறார். மன நிறைவுடன் திருப்திகரமாக வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் வேலைகளை ஆரம்பிக்கிறாள் நபீலா.

காலை மாலை ஆகின்றது.... நாட்கள் உருண்டோடி வருடங்களாகின்றன.... மாதம் தவறாத தொலைபேசி அழைப்புக்கள், முடியுமான பணத் தொகையை அனுப்புதல், சில கடிதங்கள் என தனது குடும்பத்துடனான உறவை பலப்படுத்துன்கிறாள் நபீலா......

அன்று உதித்த சூரியனில் ஏதோ ஒரு மாற்றம்.... சூரியன் தனது ஒளியை பூரணமாக உலகிற்கு வழங்க வில்லை....... அது நடக்கவிருக்கும் நிகழ்வை அறிந்து விட்டது போலும்.

"நபீலா, இஞ்ச வந்து புள்ளக்கி பால் கொடு".... வீட்டு எஜமானியின் கட்டளை. குழந்தை வடிவில் தனக்கு ஆபத்து வந்திருப்பதை அறியாதவளாக கட்டளையை அடுத்த கனமே நிறை வேற்றத் தயாறாகிறாள் நபீலா.....

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பால் கொடுக்கிறாள்... குழந்தையும் எவ்வித அழுகையும் ஆரவாரமும் இன்றி பால் குடிக்கிறது.... என்ன நடந்ததோ குழந்தை குடித்த பால் அதன் மூக்கு வழியாக வெளியேறுகிறது.. மூச்சுத் தின்றலினால் குழந்தை அவஸ்தைப்படுகிது.. குழந்தையின் நிலையைக் உணர்ந்த நபீலா என்ன செய்வ தென்று தெரியாமல் குழந்தையின் தொண்டைப் பகுதியைத் தடவிக் கொடுக்கிறாள்.... மூச்சுத்தினறல் நின்ற பாடில்லை..... மீண்டும் அழுத்தித் தடவிக் கொடுக்கிறாள்..... ம்ஹூம்.... நபீலாவின் சிகிச்சை பயனளிக்கவில்லை. குழந்தை இறந்துவிடுகிறது.

குழந்தை இறந்து விட்ட செய்தி அறிந்த வீட்டு எஜமானி சத்தமிட்டாள்... பிரேதப் பரிசோதனை, பொலீஸ் விசாரனை என பல நாட்கள் மறைகின்றன. முடிவு நபீலாவுக்கு பாதகமாக அமைவது இறைவனின் தீர்ப்பு போலும்.. குழந்தை பரிசோதிக்கப்பட்ட பின் கையால் அழுத்தப்பட்டதே குழந்தை இறந்ததற்கு காரணம் என முடிவு வருகின்றது.

மறுக்கிறாள் நபீலா.... நீண்ட நாள் விவாதங்கள்... எண்ணிலடங்கா நீதி மன்றங்கள் என நபீலாவின் விடயம் நாட் கணக்கில் அல்ல மாதக் கணக்கில் நீளுகின்றது. ஒரு குழந்தை இன்னுமொரு குழந்தையை கொலை செய்யுமா? அதையும் ஒரு பெண் செய்வாளா? அதுவும் அவள் கொலை செய்வதற்கு தனது ஊரிலிருந்து சவூதி அரேபியா வர வேண்டுமா? என்பவைகளைப் பற்றி ஒரு கணம் கூட சிந்திக்காமல் நபீலா ஒரு கொலைக் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. நபீலா தான் செய்யாத குற்றத்திற்காக தண்டனைத் திகதி குறிக்கப் படாமல் சிறை வாழ்வை அனுபவிக்கச் செல்கின்றாள்.

ஆ.. என்ற சப்தத்துடன் நினைவுலகிலிருந்து நிஜவுலகிற்கு திரும்புகிறாள் நபீலா.. ஆம்.. நபீலா நினைவுலகிலிருக்கும் வேளை தன்னையுமறியாமல் தனது விரலில் பாய் பிண்ணுவதற்கு உதவும் ஊசியால் கையில் குத்தி விட்டாள். விரலை வாயில் வைத்து உறிஞ்சியபடி தனது வாழ்வு சூனியமாகிப் போனதை நினைத்து கவலைப்பட்டிருக்கும் வேளை நபீலாவின் கதவிற்கு இரண்டு சிறை ஊலியர்கள் வருகின்றனர். எவ்வித பேச்சுமின்றி நபீலாவின் கண்கள் கட்டப்படுகின்றது. கடைசியாக அவளது கண்கள் பார்த்தது அந்த இரண்டு உரு வங்களைத்தான்.

அறிமுகமில்லாத அறிந்து கொள்ள முடியாத இரகசிய பாதையால் நபீலா அழைத்துச் செல்லப்படுகின்றாள். பாதை நீளுவதன் மூலம் தனது வாழ்வு சுருங்குவதையும் மரணம் உறுதி செய்யப் படுவதையும் உணர்ந்து கொள்கின்றாள் நபீலா. பாதை நிறைவடைகின்றது.. நபீலா நிறுத்தப்படுகின்றாள்..

"உனது கடைசி ஆசை என்ன?" அங்கிருந்த உயர் அதிகாரி ஒருவரால் வினவப்படுகின்றாள். "சேர் நான் ரெண்டு ரக்அத் தொழனும்... என்கிட்ட கொஞ்சம் காசி இரிக்கு.. அத என்ட குடும்பத்திற்கு அனுப்புங்க.. என்ட உம்மாக்கு என்ட சலாத்தை சொல்லுங்க." இது தான் நபீலாவின் வாயில் இருந்து வந்த கடைசி வரிகள்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாத்தை அழிக்க முற்படும் சியோனிஸ சக்திகள்

- MMA.Nusry, Last Year

இன்றைய நவீன உலகின் வல்லரசுகளான அனைத்து நாடுகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சியோனிஸ சக்திகளான யூத, கிறிஸ்தவர்கள் இன்றைய முஸ்லிம்களை ஒரு கீழ்த் தரமான சமூகமாகவும் தீவிரவாதிகளாகவும் அனைத்திற்கும் மேலாக முஸ்லிம்களின் மனதில் தனக்கென்று இருக்கையிட்டு அமர்ந்திருக்கும் கண்மனி முஹம்மது (ஸல்) அவர்களை ஒரு காமுகனாகவும் தீவிரவாதத்தைத் தூண்டும் தீவிரவாதியாகவும் சித்தரிப்பது, அதை சித்தரிப்பது போன்று ஒரு குருந் திரைப்படத்தை வெளியிடுவது, இஸ்லாம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்காத மார்க்கம் என பொய்ப் பிரசாரம் செய்வது மேலும் இது போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளால் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கேவலப்படுத்த முயல்கின்றனர். இவர்களின் இவ்வாறான இழி செயல்களுக்கு மிக மிக முக்கியமான காரணமாக அமைவது பொறாமையும் முஸ்லிம்களினதும் இஸ்லாத்தினதும் வளர்ச்சியை தடுக்க வேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சியுமாகும்.

புனிதமிக்க குர்ஆன் மற்றும் அதற்கு முன் இறக்கப்பட்ட தௌறாத், ஸபூர் மற்றும் இன்ஜீல் போன்ற அனைத்து வேதங்களிளும் முஹம்மது எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும் ஒரு மனிதர் இவ்வுலகிற்கு அனுப்பப்படுவார். அவர் அறியாமையில் இருக்கும் மனிதர்களை தெளிவின்பாலும், வழிகேட்டிலிருப்பவர்களை நேர்வழியின் பாலும் அழைக்கக் கூடிய தூதராக இருப்பார் என்ற வாசகங்கள் காணப்பட்டன. எனவே அவர்கள் இறுதி நபியான முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்ரவேலர்களில் வருவார் என நம்பினர். ஆனால் இவர்களின் எண்ணத்திற்கு மாற்றமாக கண்மனி நாயகம் (ஸல்) அரபுக் கோத்திரங்களில் மிக கண்ணியமான கோத்திரமான குரைஷிக் கோத்திரத்தில் உதித்தார்கள். இந்த விடயம் இவர்களுக்கு ஆச்சரியத்தையும் பெருங் கோபத்தையும் அளித்தது. இதன் காரணமாகவே இவர்கள் இஸ்லாத்தையும் மாநபி (ஸல்) அவர்களையும் யாரையும் பின்பற்ற விடக்கூடாது என்ற முயற்சியில் பல வழிகளிலும் ஈடுபட்டனர். இவர்களின் முயற்சிகளும் சூழ்ச்சிகளும் எவ்வகையிலும் கைகூடவில்லை. இவர்கள் செய்யும் சூழ்ச்சிகளுக்கும் மேலாக ஏகன் அள்ளாஹ் சூழ்ச்சி செய்பவன். ஆகையால் அவன் இவர்களனைவரின் சூழ்ச்சிகளையும் முறியடித்து அந்த அறியாமைக் காலத்திலும் கூட ஒரு பெருங்கூட்டம் இஸ்லாத்தைப் பின்பற்ற வழிவகை செய்தான்.

ஆனாலும் அவ்யூத சக்திகள் முயற்சிக்கு மேல் முயற்சிகள் செய்தன. எப்படியிருந்தும் நபியவர்களின் காலத்திலும் அவர்களை தொடர்ந்து வந்த இரு கலீபாக்களின் காலத்திலும் இவர்களின் எவ்விதமான முயற்சிகளும் பயனளிக்க வில்லை. இவர்களின் அனைத்து சதிகளையும் அவர்கள் தவிடுபொடியாக்கினர். இவ்விருவரின் பின்வந்த அப்துள்ளாஹ் பின் ஸப.ஃ. என்ற முனாபிக்கை மையமாக வைத்து ஸன்ஆ நகர யூதர்கள் திட்டமிட்டு முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏகத்துவத்திற்கு எதிரான மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களிளும் பல்வேறுபட்ட ஊடுருவல்களை ஏற்படுத்தி முஸ்லிம்களுக்கு மத்தியில் சண்டைகளையும் உண்டாக்கினர். இதன் பின்னர் தான் இவர்களின் முயற்சிகள் இவர்களுக்கு கைகூட ஆரம்பித்தன.

அவர்களின் அடுத்த கட்ட முயற்சியாக முஸ்லிம்களின் அறிவுசார் கண்டுபிடிப்புகளை அவர்களின் கண்டுபிடிப்புகளாக உருவகப் படுத்தி முஸ்லிம்கள் கல்வியில் உயர்ந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களல்லர், அடிமட்ட முட்டாள்கள் என்ற கருத்துக்களுக்கு வித்திட்டனர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் கலாசார ரீதியாக தாக்கம் செலுத்த ஆரம்பித்தனர். முஸ்லிம் களின் ஆடை, அலங்காரங்கள், நபி(ஸல்) அவர்களின் சுன்னாவுக்கு மாற்றமான செயற் பாடுகள், பாலியல் உணர்வுகளைத் தூண்டக் கூடிய பெண்களின் ஆடையமைப் புக்கள் போன்ற ஏராளமான விடயங்களை முஸ்லிம் களுக்கு மத்தியில் பரப்பி விட்டனர். இம் முயற்சி இவர்களுக்கு கைகொடுக்க ஆரம் பித்தவுடன் உலக நாடுகளில் ஏற்றுமதி, இறக் குமதி என்ற பெயரில் தொடர்புகளை ஏற்படுத் திக் கொண்டு அந்நாடுகளை அவர்களின் இரத்த தாகத்தை தீர்க்கக்கூடிய பூமியாக மாற்றி யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். இதன் மூலம் பலஸ்தீன், ஈராக், லிபியா மற்றும் சிரியா போன்ற நாடுகளை இரத்தம் தோய்ந்த பூமிகளாக மாற்றினர். பல்லாயிரம் முஸ்லிம் களை கொன்று குவித்தும் பல முஸ்லிம் பெண்களை கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்தும் அவர்களின் கொடுமைகளையும் காட்டு மிராண்டித்தனமான செயற்பாடுகளை யும் மெல்ல மெல்ல சர்வதேச அரங்கில் அரங்கேற்றினர்.

இதன் காரணமாக உலக நாடுகள் இவர்க ளுக்கு அஞ்சி இவர்களின் விடயங்களிலிருந்து பின்வாங்க ஆரம்பித்தன. வெறுமனே ஒரு கோடி ஐம்பது லட்சம் யூதர்கள் 150 கோடி முஸ்லிம்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயல்கின்றனர். அடுத்த கட்ட மாக இவர்கள் ஊடகங்கள் மூலம் முஸ்லிம் களை சாட ஆரம்பித்தனர். ஊடகம் என்பது ஒரு மனிதனில் உணர்வுரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு சாதனம் என்பதை உணர்ந்து கொண்டு பல நச்சுக்கருத்துக்களையும் பாலியல் ரீதியான நடவடிக்கைகளையும் ஷரீஆ சட்டத்திற்கு முரணான கருத்துக் களையும் வீசியெறிய ஆரம்பித்தனர் இப் போது அந்நடவடிக்கைகள் மிகப் பரவலான முறையிலும் ஆக்ரோஷமான முறையிலும் ஆரம்பித்துள்ளனர். நவீன சாதனங்கள் மலிந்து கிடக்கும் இக்காலப் பகுதியில் இவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் சிறியோர் முதல் பெரியோர் வரை பட்டித் தொட்டி எங்கும் பரவ ஆரம்பித்துள்ளது. முஸ்லிம்களின் தலைவர் மாநபி (ஸல்) அவர்கள் தொடர்பான கேலிச்சித்திரங்களை வரைந்தும், யூதர்களுக்கே உரித்தான காமம், தீவிரவாதம் என்ற இரு பண்புகள் உடைய வராக சித்தரித்து திரைப்படங்களை வெளியிட்டும் இவர்களது கருத்துக்களை உண்மைப்படுத்த முனைகின்றனர். மேலும், பண பலமும் ஆட்சி அதிகாரமும் இவர்களிடத் தில் குவிந்து கிடப்பதால் இவர்களை எந்த சக்தியாலும் எதுவும் செய்துவிட முடியாது என்கின்ற கர்வத்தில் வாழந்து கொண்டிருக் கின்றனர்.

இவர்கள் முஸ்லிம்களை அழிக்கவும் வழிகெடுக்கவும் பின்வரும் நான்கு பிரதான விடயங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

01. யுத்த சூழலை முஸ்லிம்களுக்கு மத்தியிலும் முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியிலும் உருவாக்குதல்

02. சிந்தனை ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துதல்

03. கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்துதல்

04. ஊடகங்கள் மூலமாக முஸ்லிம் களையும் முஸ்லிம் தலைவர்களையும் மாசுபடுத்துதல்

இவர்களின் அட்டூழியங்கள் இன்னும் தொடரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை இறுதியாக யுகமுடிவு நாளின் போது ஈஸா (அலை) அவர்களின் வரவின் பின்னர் ஒரு நிராகரிப்பாளனும் இப்புவியில் வாழமாட்டான். அனைவரையும் அவர்கள் அழித்து விடுவார்கள். முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ் வார்கள். இதன் பிறகுதான் இவ்வுலகம் முடி வுக்கு வரும். ஆனால் முஸ்லிம்களாகிய நாம் யூதர்கள் நமக்கு சதி செய்வார்கள். மார்க்கத் திற்கு முரணான அம்சங்களை மேற்கொள் வார்கள் என்று தெரிந்தும் கூட அவர்களின் சதிகளில் சிக்கிக்கொள்கிறோம்.

நம்மால் இயன்ற அளவு அவர்களின் சதிகளில் சிக்கிக் கொள்ளாமலும் நமது தலைவரான ரஸூல் (ஸல்) அவர்களையும் நமது முஸ்லிம் சகோதரர்களையும் வதைக் கக்கூடிய இவர்களின் பால் தேவையற்றவர்களாக இருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். வல்ல நாயன் அல்லாஹு தஆலா நம் அனைவரையும் இச்சியோனிச சக்திகளிடமிருந்து பாதுகாப்பானாக!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் மருத்துவசாதனைகள்

Akmal, Grade-2

எல்லாப் புகழும் அள்ளாஹ்வுக்கே, தற்போதைய கால கட்டத்தில் முஸ்லிம்களின் சாதனைகள், முயற்சிகள் எல்லாம் மறைக்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களின் சாதனைகளை நாம் மக்களுக்கு எடுத்துக் கூறுவது அவசியம். இப்போது அப்படிப்பட்ட முஸ்லிம்களின் சாதனைகளில் மருத்துவசாதனைகள் பற்றிப் பார்ப்போம்.

கி.பி 600 முதல் 1500 ம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் தென்மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் ஆட்சி செய்தார்கள். இக்கால கட்டத்தில் பல நவீன மருத்துவ முறைகளை உலகிற்கு அளித்தார்கள்.

கி.பி 711 முதல் 1492 வரை முஸ்லிம்கள் ஸ்பெய்னை ஆண்டு வந்தார்கள். (800 ஆண்டுகள்) ஸ்பெய்னில் இஸ்லாமிய ஆட்சி சீரும் சிறப்புமாக நடந்து வந்தது. அக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். குறிப்பாக மருத்துவத்தில் பல அரிய முடிவுகளை கண்டு பிடித்து மருத்துவ சாதனைகள் புரிந்துள்ளர்கள்.

✓ மத்திய காலத்தில் வாழ்ந்த மாபெரும் மருத்துவ அறிஞராக அலீ இப்னு ஸீனா (றஹ்) அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களுக்கு ஹுஜ்ஜதுல் ஹஜ், இரண்டாம் ஜாலினுஸ், ஷைகுல் ஹதீஸ் மற்றும் இரண்டாம் அரிஸ்டோட்டில் போன்ற பட்டங்கள் கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார்கள்.

✓ பேர்சியாவில் வாழ்ந்த புகழ் பெற்ற அறேபிய மருத்துவர் "றஸாஸ்" என்பவர் பெரியம்மை மற்றும் சின்னம்மை போன்றவைகளைப் பற்றியும் அதன் வேறுபாடுகள் பற்றியும் அந்நோய்கள் எதனால் ஏற்படுகின்றன என்பதைப் பற்றியும் தெளிவாக "நோய் நிவாரணி" எனும் நூலை எழுதி வெளியிட்டார்.

✓ பைத்தியகாரர்களுக்கென்று தனிப்பட்ட மருத்துவ மனைகளை அமைத்து சிகிச்சையளித்தது முதன் முதலாக ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் உடைய காலத்தில்தான்.

✓ பிர்தௌஸ் ஹிக்மா என்ற மருத்துவ நூலை அத்தபரி என்ற முஸ்லிம் மருத்துவர் எழுதி உலகுக்கு அளித்தார்கள். இதுதான் முதலாவது அறேபிய மருத்துவ நூலாகும்.

✓ அலீ இப்னு ஸீனா (றஹ்) அவர்கள் மருத்துவ நூலில் 760 மருந்துகளும் பல மருத்துவ முறைகளும் கூறப்பட்டுள்ளன.

✓ சத்திர சிகிச்சை முறையை உலகுக்கு அளித்த பெருமையும் முஸ்லிம் களையே சாரும்.

✓ பிரசவ நேரத்தில் குழந்தை வெளி வராமல் தவித்த போது இடுக்கையின் மூலம் குழந்தையை வெளியாக்கும் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்களும் முஸ்லிம்களே.

✓ சிசேரியன் சத்திர சிகிச்சை முறையைக் கூட முஸ்லிம்களே இவ்வுலகிற்கு அறிமுகப் படுத்தினார்கள்.

✓ மஞ்சல் காமாலை நேயைப் பற்றயும் அதன் மருத்துவ சிகிச்சைகளையும் நரம்புத்தளர்ச்சிக்கான மருந்துகளையும் முதன் முதலில் உலகுக்குத் தந்ததும் முஸ்லிம்களே.

✓ இஸ்லாமிய மருத்துவத்தைக் கற்றுக் கொடுக்கத்தான் ஐரோப்பாவில் முதன் முதலில் மருத்துவக் கல்லூரிகள் தோன்றின.

✓ இசையால் நோயைக் குணப்படுத்த முடியும் என உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் முஸ்லிம்களே.

✓ கி.பி 819 ல் ஆட்சி செய்த அப்பாசிய கலீபாவான மஃமூனுடைய காலத்தில் தலைநகரில் மட்டும் 460 மருத்துவர்கள் இருந்து பணி செய்ததாக வரலாறு கூறுகிறது.

முஸ்லிம்களின் மருத்துவ சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடியவை. அன்றும் இன்றும் இனியென்றும் இஸ்லாமிய அரிய சாதனைகள், ஆக்கபூர்வமான சாதனைகள் மற்றும் மருத்துவ விஞ்ஞான முன்னேற்றங்கள் தனித்து நின்று வெற்றிவாகை சூடும் என்பதில் முஸ்லிம்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள மானிடா – நிறை
அறிவுள்ள மானிடா – நான்
சொல்வதைக் கேளடா...
மரணம் உண்டடா – அது
உன்னையும் விடாதடா...

உன் சொத்தும் உனக்கில்லை
உன் வீடும் உனக்கில்லை
உண்மையைச் சொல்லப்போனால்
உன்னுடலும் உனக்கில்லை
மரணம் வந்தவிட்டால்...

உன் உற்றார் உன்னையே
உண்மையாக மையித் என்பர்
உன் கப்ரில் உன்னைச் சேர்க்க
உறுதியாக முயற்சிப்பர்
மரணம் வந்தவிட்டால்...

செயலேடும் மூடப்படும்
தௌபாவும் நிறுத்தப்படும்
நிலையான கொடையதுவே
உனக்காக நன்மை தரும்
மரணம் வந்தவிட்டால்...

கப்ரிலே உன்னை வைப்பர்
அமரரும் வந்திடுவர்
விசாரனையும் தொடங்கிவிடும்
உருக்கமான அதட்டலோடு
மரணம் வந்தவிட்டால்...

மன் ரப்புக வமா தீனுக
என்றே தொடுத்திடுவர்
கேள்விக் கனைகளையே
ஒன்றன் பின் ஒன்றாக
மரணம் வந்தவிட்டால்...

மன்னுலகில் நல்லவனாய்
நீயே வாழ்ந்திருந்தால்
இலகுவாய் விடை பகர்வாய்
சுவனத் தென்றல் சுவைத்திடுவாய்
மரணம் வந்தவிட்டால்...

வல்லோன் அல்லாஹ்வை
மறந்தே நீ வாழ்ந்திருந்தால்
தெரியாது என்பாயே
நரகத்தை காண்பாயே
மரணம் வந்தவிட்டால்...

றஹ்மத்தாய் வந்திட்ட
மாநபி முஹம்மதை
ஏற்க நீ மறுத்திருந்தாலும்
இந்நிலையே உனக்காகும்
மரணம் வந்தவிட்டால்...

அன்பாளன் றஹ்மானை
இறுதியாய் கேட்கின்றேன்
மு:.மினாய் வாழச் செய்–என்னை
முஸ்லிமாய் வாழச்செய்யென்று
விழி நிரம்ப நீரோடு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் ஒரு சாபம்

இத்தீய பழக்கமுடையவர்கள் சமுதாயத்தில் குழப்பத்தையும் பிரிவுகளையும் தவிர வேறெதையும் செய்ய உதவமாட்டார்கள். மக்கள் அவர்களை உதவாக்கரையென ஒதுக்கி விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒரு சபையில் வந்தமர்ந்தாலும் அப்போது அங்கிருப்பவர்கள் அவரைப் பற்றி உள்ளத்தில் வேறு விதமாகத்தான் நினைப்பார்கள். பொய் சேசுபவன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரு செயலையே செய்கிறான்.

ஒரு மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு முக்கிய செயலாக பொய் பேசும் பண்பு விளங்குகின்றது. இது நீண்ட காலம் வைத்தியம் செய்யப் படவேண்டியதொரு வியாதியாகும்.

பொய் என்பது ஒரு முஃமினிடம் இருக்கக் கூடாத பண்பு. எனவேதான், றஸூலுழ்ழாஹி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள். "ஒரு முஃமினிடம் எல்லாத் தீய பண்புகளும் இருக்கலாம். ஆனால், அவனிடம் பொய்யும் நேர்மையிண்மையும் இருக்கக் கூடாது"

மேலும் முஃமினுக்கு மாற்றமான ஒருவரின் பண்புகளைக் கூறும் போது கூறினார்கள். "ஒரு நயவஞ்சகனிடம் மூன்று தன்மைகள் காணப்படும்

1. பேசினால் பொய் பேசுவான்

2. வாக்களித்தால் மாறுசெய்வான்

3. நம்பினால் துரோகம் செய்வான்" என்று கூறினார்கள்.

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "பேசினால் நல்லதைப் பேசுங்கள் அல்லது மௌனமாக இருந்து விடுங்கள்" என்றார்கள்.

பொய்யை சொல்லுகின்ற ஒருவன் அந்தப் பொய்யை எந்தளவுக்கு பரப்புகிறானோ அந்த தூரத்தின் அளவிற்கு அவனது பாவத்தின் அளவை வளர்த்துக்கொள்கின்றான். ஆகவே, பொய் பேசுபவர்கள் மிகக் கடுமையான தண்டனைகளை அனுபவிப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

எனவே நாம் இக்கொடிய பாவத்திலிருந்து விமோசனம் பெற்றவர்களாய் வாழ்வதற்கு முயற்சிப்போம். இதற்காக வேண்டி தினமும் இறைவனிடம் இறைஞ்சுவோம். மேலும் எமது நாவையும் பாதுகாத்துக் கொள்வோம்.

- A.Muhammed, Gread-1

---

(வாசமில்லாப் பூ : 10ம் பக்க தொடர்ச்சி..)


தொழுவதற்கு அவகாசம் வழங்க படுகின்றது. நீண்ட நேரம் சுஜூது...

அமைதியாக இரண்டு ரகஅத் தொழுது முடிக்கின்றாள் நபீலா.. தலையில் ஒரு பை போறப்படுகின்றது. கலிமாவை மொழிகின் றாள்.. மரண தண்டனை நிறைவேற்றப் படுகின்றது. நபீலாவின் உயிர் தன்னைப் படைத்த இறைவனிடம் சென்றடைகின்றது. இஸ்லாமிய முறைப்படி சகல வித ஆயத்தங் களும் செய்யப்பட்டு நபீலாவின் ஜனாஸா அங்கேயே நல்லடக்கம் செய்யப்படுகின்றது. நபீலா சந்தோஷமாக இறைவனை அடைந்த வேளை நபீலாவின் வீட்டில் அழுகுரல்கள்...

மலர்ந்த பூ வாசமின்றியே உதிர்ந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிய வாழ்விற்கு இயற்கை மருத்துவம்

பல்வேறு மூலிகைகளில் இலைச் சாறு பிளிந்து அதிகாலை வெறும் வயிற்றில் சாப்பிடலாம். இதனால் பலநோய்கள் குணமடைகின்றன. பக்க வினளவுகள் ஏதும் இருக்காது. சாறுகளை கொஞ்சம் கொஞ்சமாக வாயில் ஊற்றி எச்சிலோடு கலந்து சுவைத்து அருந்த வேண்டும்.

**01) அறுகம்புல் சாறு :**

இதனைச் சாப்பிட்டு 2மணி நேரம் கழித்து 2 வாழைப்பழங்களுடன் ஒரு வேளை உண வை முடித்துக் கொள்ள வேண்டும். எல்லா நோய்களுக்கும் ஏற்ற டானிக் (மருந்து) அறுகம் புல் சாறு புதிதாக குளுக் கோஸ் ஏற்றியது போல அதிக சக்திகளை இது அளிக்கிறது. இரத்தத்தை சுத்தம் செய்து நரம்புகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. அமிலத் தன்மையை குறைக்கிறது. மலச்சிக்களை நீக்குகிறது. ஆண்மைத் தாதை விருத்தியாக்குகிறது. இருமல், வயிற்று வலி, மூட்டுவலி, இருதயக் கோளாறு, தோல் வியாதிகள் யாவும் நீங்குகிறது. அறுகம் புல் பச்சயம் நம் இரத்தத்தில் சிவப்பு அணுக்களை அதிகரித்து இரத்த விருத்தியை உண்டாக்குகிறது. சக்கரை நோய் குறை கிறது. ஆஸ்துமா இரத்த அலுத்தம் ஆகி யவையும் குறைகின்றது. தாய்ப்பால் அதிகரிக் கிறது. உடலிலுள்ள நச்சுத் தன்மைகளை அகற்றுகின்றது. கொழுப்பச் சத்து குறைந்து உடல் எடைகளை குறைக்கும், தினமும் அருந்தி வருபவருக்கு எதிர்காலத்தில் நோய்கள் வராது.

**02) துளசி இலைச்சாறு :**

காய்ச்சல், இருமல், ஜீரணக் கோலாறுகள், ஈரல் சம்மந்தமான நோய்கள், காதுவலி ஆகியவைகளை நீக்கி இரத்தத்தைத் துப்பரவு செய்கிறது.

**03) தூதுவலை இலைச்சாறு :**

மார்புச் சலியை அகற்றும், நரம்புத் தளர்ச்சி மறையும், மூளை வளர்ச்சி நினைவாற்றல் அதிகரிக்கும், தோல் நோய்கள் மறையும்.

**04) பொன்னாங்கண்ணி இலைச்சாறு :**

உடலுக்கு வலுவூட்டுவதோடு பொன் போல் பளபளக்கும் தன்மையை அதிகரிக்கும், கண்ணொளி அதிகரிக்கும். வாத நோய்கள், குடல் நோய்கள் நீங்கும், தாது விருத்தியாகும், வாதநோய்கள் மறையும், உடல் சூடு குறையும்,

**05) வல்லாறை இலைச்சாறு :**

நினைவாற்றல் வளரும், நரம்புத் தளர்ச்சி அகலும், வயிற்று நோய்கள், குடல் நோய்கள் நீங்கும், தாது விருத்தியாகும், சிறுநீர் நன்கு பிரியும், இதயம் வலுவாகும்.

**06) நெல்லிக்காய்ச் சாறு :**

துலை முடி உதிர்வது நிற்கும், தும்மல், இருமல், சலி நீங்கும். கண் நோய் மறையும், பல் நோய்கள் விலகும், நீரிழிவு குறையும், உடல் பலவீனம் நீங்கி வலுவாகும், தோல் நோய்கள் நீங்கும்.

**07) வாழைத் தண்டுச் சாறு :**

சிறுநீர் அடைப்பு சம்மந்தமான நோய்கள் விலகும், இரத்த அலுத்தம் குறையும், உடல், கை, கால் வீக்கம் குறையும், அமிலத்தைக் குறைக்கும், இரத்தம் சுத்தமாகும்.

**08) சாம்பல் பூசனிச்சாறு :**

பெண்களுக்கு மாதவிடாய் நோய்கள், கருப்பை நோய்கள் தீரும், வயிற்றுப் புண்கள் ஆறும், அமிலத்தை குறைக்கும்.

**09) கரட் சாறு :**

கண் பார்வை ஒளிபெறும், கண் நோய்கள் மறையும், பல் நோய்கள் நீங்கும், அமிலத் தன்மை குறையும்.

**10) கொத்த மல்லிச் சாறு :**

பசியைத் தூண்டும், பித்தம் குறையும், வாத நோய்கள் மறையும், காய்ச்சல், சலி, இருமல் நீங்கும், வாதம் மறையும்.

**- Ibnu Ansar, Grade-6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைநேசர் இதயம்...

பொங்கும் இறையருளிற் பூத்துப் பொலிவுற்று
போக சுகமெல்லாம் புதைத்து மண்மீதில்
துங்க மணிச்சரமாய், தூய்மை கொழித்தோராய்
துறவு நிலை பூண்ட இப்றா ஹீம்-அத்ஹம்
தங்கு(ம்) இடமெல்லாம் தவத்திலாழ்ந்திடுவார்
தகைமை யிறைபக்கல் தயவு வேண்டிடுவார்
பொங்கும் அருள்நாதர் பொழுத லாம் அழுது
புலம்பிப் பதறிடுவார்! புகன்று கதறிடுவார்:

"இறையின் நேசரென இலங்குந் தாசரென
இனிதே புகழ் கொண்ட இப்றாஹீம் நபியார்
இறையை நிதமஞ்சி இரண்டு கரமேந்தி
'ஏக இறையவனே, எங்கும் நிறைந்தவனே,
கறைகள் துடைத்தறியாக் கல்லை வணங்கி நிதங்
கலங்கும் நிலைதனிலே என்னைச் சேர்க்காதே!
இறையே இரந்தேனே! குறைகள் தீர்ப்பாயே!'
என்றே இறைபக்கல் இறைஞ்சிக் கலங்கிடுவார்!



"ஒளிரும் எழில்பூத்த உயர்வார் நபியூசுப்,
'ஒல்காப் புகழிறையே! மல்கும் அருளிறையே!
எளியேன் எனையுனது இஸ்லாம் 'தீன்'நெறியில்
இறக்கச் செய்திடுவாய்!' என்று இறந்திடுவார்!
தெளிவார் சுப்யானுத் தௌரீ எனும் பெரியார்
'திறனார் இறை! என்னைக் காப்பாய்! கறையொழிப்பாய்!'
தெளிவாய் இறைபக்கல் இதயங் கசிந்தவராய்
தினமும் பிரார்த்திப்பார் தீமை கண்டறியார்!

"மணக்கும் இறையருளின் மாண்பு நிதங்கண்டோர்
மனத்தில் "தௌஹீதி"ன் சுடரின் இதங்கண்டோர்ஹு
பிணக்கும் பிழையில்லாப் பெரியார் அன்னாரகள்
பிழைகள் பொறுத்தருளப் பிரார்த்தித் திருப்பாரேல்,
மனமே! நீயென்ன மரணந் துய்த்தனையோ?
மறுமை 'மஹ்ஷரி'லே மயக்கும் வேளையிலே
பிணமாய்-பிழையுருவாய் பேதை நான் நின்று
பெரிதுங் கவல்வேனே! அந்தோ என்மனமே!"

*கவிமணி, கலா பூசணம்*
**எம்.எச்.எம்.புஹாரி (பலாஹி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகச் சீர்கேடுகளுக்கு இட்டுச் செல்லும்

# நவீன கலாசாரம்

அல்லாஹுதஆலா இந்த உலகத்தில் பல வகையான உயிர் ஜீவராசிகளைப் படைத் துள்ளான். அவைகளில் மிகவும் சங்கையான படைப்பாக மனித இனத்தைப் படைத்துள் ளான். அல்லாஹுதஆலா இது பற்றிப் குறிப்பிடும் போது -

“ஆதமுடைய மக்களை (மனித இனத்தை) நாங்கள் சங்கையாக்கினோம்” (17:70)

இந்த மனிதன் நாளுக்கு நாள் பல வகையான கலாசாரங்களிலும் பண்பாடு களிலும், அறிவியல்களிலும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் அடைந்து வருகிறான். மனிதனுடைய கலாசாரம் ஊருக்கு ஊர், காலத்திற்கு காலம், நாட்டிக்கு நாடு வித்தியாசப்படுகிறது. ஒரு நாட்டின் கலாசாரம் மற்ற நாட்டிற்கு வேடிக்கையாகவும் அனாச் சாரமாகவும் தென்படுகிறது. இக்கலா சாரம் ஆடைரீதியாகவும் சடங்கு ரீதியாகவும் வேறுபட்டிருப்பதை காண முடிகிறது.

இன்றைக்கு பெரும்பாலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் ஆடைக் கலாசாரங் கள் வித்தியாசப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் அவர்களின் ஆடைகளிலே எவை ஆண்களின் ஆடைகள்? எவை பெண்களின் ஆடைகள்? என்று இனங்கண்டு கொள்ள முடியாத அளவிற்கு அவர்களின் ஆடைகள் காணப்படுகின்றன.

பெண்களின் ஆடைகளை பொறுத்த வரை அந்நிய ஆண்களை இச்சையின் பக்கம் தூண்டக் கூடியதாக அமைகின்றன. கடுமையான ஆபாசமான ஆடைகளைப் பெண்கள் அணிகின்றார்கள்.

இவைகளுக்கெள்ளாம் அப்பால் ஜேர்மன் நாட்டிலே உணவகம் (hotel) ஒன்று இருக்கின்றது அந்த உணவகத்துக்கு பெயர் Nude World (நிர்வாண உலகம்) அந்த உணவகத்துக்குச் செல்லும் ஆண்களும் பெண்களும் ஆடைகள் இல்லாமல் உள்நுழைய வேண்டும் என்பதை நிபந்தனை யாக்கி இருக்கின்றார்கள். ஆனால் அவர் களுக்கு அது ஆபாசமாகத் தென்படு வதில்லை. அதற்கு கலாசாரம் என்று தாங்க ளாகவே நாமம் சூடிக்கொள்கின்றனர்.

மேலும் பெண்சுதந்திரம் எனும் பெயரில் காரியாலயங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களுடைய முழங்காலகளுக்கு கீழ் ஆடை அணியக்கூடாது என்பதை கட்டாயக் கடமையாக்கி இருக்கின்றனர். துருக்கி போன்ற முஸ்லிம் நாடுகளிலே உள்ள காரியாலயங்களிலும் இச்சட்டம் அமுல் படுத்தப்படுகிறது. மேற்கத்தேய நாடுகளில் கார் கம்பனிகளிலே பெண்கள் அரை குறை ஆடைகளுடன் வருகின்ற வாடிக்கையாளர் களுக்கு கார் கழுவிக்கொடுக்கும் பணியாளர் களாகவும் நியமித்துள்ளார்கள்.

மேலும் “ஆண்களும் பெண்களும் சமமே. பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும்.ஆகவே பெண்களுக்குரிய அனைத்து உரிமை களையும் நாங்கள் வழங்குகிறோம்” என்ற பெயரில் பெண்களை ஏமாத்துகின்ற மேற்கத்தேய நாடுகள் “ஒரு பெண் கணவன் என்று வரையறை இல்லாமல் யாருடன் வேண்டுமானாலும் உறவை வைத்துக் கொள்ளலாம்” என்ற கொள்கையைப் பரப்பிக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களின் மடத்தனமான கருத்துக்களை வேதவாக்காக எடுத்துக்கொண்டு அவைகளைப் பின்பற்றுகின்ற பெண்கள் பல சீர்கேடுக ளுக்கும் உள்ளாகின்றார்கள். இவற்றை யெல்லாம் தாண்டி அந்நிய ஆண்களுடன் வெட்கக்கேடான காரியங்களில் ஈடுபட்டு அவைகளை உலகரியும் வண்ணம் இணையதளங்களிலும் இரு வெட்டுக்களிலும் வெளியிடப்பட்டுக் கொண்டு இருப்பதை ஏற்றுக்கொள் கின்றார்கள்.

இப்படிப்பட்ட மேற்கத்தேய அனாச்சாரமான காரியங்கள் கலாசாரம் எனும் தோற்றத்தில் தொற்று நோய்களாக எங்களுடைய கண்டங்களிலும் பரவி வருகின்றன. இவைகளின் தாக்கம்தான் சில முஸ்லிம் பெண்கள் கூட பெண்களுக்கு விபச்சாரத் திற்கான தகுந்த ஊழியம் வழங்கப்பட வேண்டும் என்று ஊடகங்கள் வழியே உளறித் திரிகின்றார்கள். முஸ்லிம் எனும் பெயரில் உள்ள யூத நாடுகளுக்கு விலை போன சல்மான்ருஸ்தி என்ற பிற்போக்கு வாதி “இஸ்லாம் பெண்களை அடிமைப் படுத்துகின்றது” என்கின்ற கருத்தைத் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் மூலம் வெளிப்படுத்தினான். அதே வழித்தோன்றலில் வந்த தஸ்லீமா நஸ்ரின் என்ற வெட்கம்கெட்டவள் பெண்களுக்கு கற்புச் சுதந்திரம் வேண்டும் என்ற மோசமான கருத்தைத் தன் நூலின் மூலம் வெளிப்படுத்தி னாள்.

இத்தகைய அனாச்சாரமான காரியங்களைக் கலாச்சாரமாக பின்பற்றி வருவதன் காரணமாக மேற்கத்தேய நாட்டுப் பெண் களும் அக்கலாசாரங்களை பின்பற்றுபவர் களும் பல அசௌகரியங் களை எதிர் கொள்கின்றனர்.

அமெரிக்காவில் 40-70 வீதமான பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சாயிஸ் ஹாரிஸ் என்ற அமைப்பு ஆண்களும் பெண்களும் கலந்து பணிபுரிகின்ற காரியாலயங்களில் 782 தொழிலாளர்களிடம் தொலைபேசியின் மூலமாக பெறப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 37 வீதமான பெண்கள் பாலியல் பலாகாரத்திற்கு உற்படுத்தப் படுவதாக தெரியப்படுத்துகின்றது. அவ்வாறு வல்லுறவுக்கு உற்படுத்தியவர்களில் 100% ஆண்களின் மூலமாகத்தான் எனறு அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் 43% பெண்கள் உயர் அதிகாரிகளான ஆண்களினாலும் 27% பெண்கள் சீனியர்களான ஆண்களினாலும் 19% பெண்கள் தாங்களுக்குச் சமமான அந்தஸ்திலுள்ள ஆண்களினாலும் 11% பெண்கள் தங்களுக்குக் கீழ்நிலையிலுள்ள ஆண்களினாலும் வல்லுறவுக்கு உட்படுத் தப்படுகின்றார்கள் என்று அந்த நிறுவணம் தெரிவித்துள்ளது.

அதே அமெரிக்காவில் 8-11 வயதுடைய 1632 மாணவிகளில் 85% பெண்கள் பாலியல் பலாக்காரத்திற்கு உட்படுவதாகவும் அமெரிக்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் 31% மாணவிகள் அடிக்கடி பலாத்காரத்திற்கு உட்படுவதாக அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்படிப்பட்ட மானக்கேடான காரியங்கள் மூலமாக (எய்ட்ஸ்) H.I.V போன்ற நோய்க்கு மக்கள் உள்ளாகின்றார்கள். இந்நோய்க்குப் பிரதான காரணம் முறையற்ற பாலியல் செயற்பாடுகளும் ஓரினச் செயற்கையும் என்று மருததுவம் நிரூபித் துள்ளது. எமது அயல் நாடான இந்தியாவிலே தமிழகத்தில் மாத்திரம் 1 ஆண்டிற்கு 25000 பேர் HIV நோய்களுக்கு உள்ளாகின்றார்கள்.

அதே தமிழகத்தில் 3 வருடங்களில் 92363 HIVக்கு உட்பட்டு இருக்கிறார்கள். இது 2012ம் ஆண்டு சென்னை சுகாதகரப் பிரிவினால் பெறப்பட்ட தகவலாகும்.

2009ல் இருந்து 2012 வரையிலான 3 வருடங்களில் இந்தியாவின் பல பாகங்களிலும் பாதிக்கப்பட்டோரின் விபரம்

| ஆண்டு | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| ஆந்திரா | 69155 | 76550 | 61121 |
| டெல்லி | 8228 | 3559 | 5359 |
| கர்நாடகா | 38276 | 38276 | 42043 |
| கேரளா | 2551 | 2539 | 1958 |

இவ்வாறு இந்த நோயினால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு மேற்கத்தேய நாடுகளின் மோசமான கலாசாரப் பண்புகளும் காரணமாக அமைகின்றன. இவ்வாறு அசிங்கமான கலாசாரப் பண்புகளை இஸ்லாம் வண்மையாக கண்டிக்கின்றது. மனிதன் வெட்க உணர்வுடன் தன் மானத்தோடு வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் பார்வை களைப் பேணிக் கொள்ளுமாறும் கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கட்டளை இடுகிறது. பெண்களை ஆபாசமான ஆடைகள் அணிவதை விட்டும் முற்றாக தடைசெய்கிறது. பெண்களை பாதுகாப்ப தற்காக வேண்டி கண்ணியமான உடையான ஹிஜாப் எனும் ஆடைகளை அணியுமாறு பெண்களுக்கு வலியுறுத்து கின்றது.

திருமணமாகாதவர்கள் விபச்சாரம் செய்தால் மு·.மின்களின் ஒரு கூட்டத்தை சாட்சியாக வைத்து இரக்கம் காட்டாமல் விபச்சாரம் செய்தவர்களுக்கு 100 கசையடி அடிக்குமாறு கட்டளையிட்டு இருக்கிறது. திருமணம் முடித்தவர்கள் விபச்சாரம் செய்தால் விபச்சாரம் செய்த இருவருக்கும் கல்லெறிந்து மரணதண் டனை வழங்க வேண்டும் என கட்டளை யிட்டு இருக்கின்றது. உலகத்திலே மானக்கேடான காரியங்களை ஒழிப்பதாக இருந்தால் இஸ்லாமிய சட்டதினை அமுல் படுத்துவது கட்டாயமாகும். அப்போதுதான் அழிவையும் ஆபாசத்தையும் நோக்கிச் செல்கின்ற மனிதர்களை நேர்வழிப் படுத்த முடியும். ஆகவே நபியவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மொழியான வார்த்தைகளில் சிறந்த வார்த்தை அல்லாஹ்வுடைய வார்த்தை கலாசாரங்களில் சிறந்த கலாசாரம் நபியவர்களுடைய கலாசாரம் என்கிற நபிமொழியைப் பின்பற்றி வாழ்வதற்கு முஸ்லிம்களான நாங்கள் முயற்சி செய்வோம்.

**ALM.Hafeel, Last Year**

## அர்த்தமான நேரங்கள்..

❖ உழைக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது வெற்றியின் விலை

❖ சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது இளமையின் இரகசியம்

❖ விளையாட நேரத்தை எடுத்துக்கொள் - அது சக்தியின் ஊற்று

❖ படிக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது வாழ்கையின் வேர்

❖ நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள் - அது இன்பத்தின் பாதை

❖ திட்டமிட நேரத்தை எடுத்துக்கொள் - அது சாதனைக்கு வழி

❖ அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள் - அது இறைவனின் கெடை

❖ சேவை புரிய நேரத்தை எடுத்துக்கொள் - அது வாழ்க்கையின் குறிக்கோள்

❖ சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள் அது - இதயத்தின் இன்னிசை

கல்வி வேறு படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆன்மா சிறப்புப் பெற சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டும் அதைத் தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகி விடாது. ஆனாலும் அது அவசியமானது. ஆனால் அதை விடவும் உணவு முக்கியமானது. அதைப் போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

**MAM.Asfaaq, Grade-6**

➢ மின்னமுத்தியைக் கண்டுபிடித்தவர் யார்?

♦ HW. சீலே

♦ நாடு : அமேரிக்கா

♦ ஆண்டு : 1882

(7ம் பக்க தொடர்ச்சி) வாழ்கையில் தோல்வியைத்தவிர வேறதுவும் கிடைக்காது. அது மட்டுமல்ல தீமையில் மிகவும் கேவலமானதும் மானத்தை உறிஞ்சி எடுக்கின்ற ஒன்றும் தான் விபச்சாரம். இதனைப் பற்றி அல்லாஹ் “விபச்சாரத்தின் பக்கம் நெருங்கவே வேண்டாம்” எனக் கூறுகின்றான்.

ஆனால் மனிதன் இதனை மறந்து சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் செய்து கொண்டிருக்கிறான். 2012ம் ஆண்டு 2011ம் ஆண்டை விட விபச்சாரம் கணிப்பீட்டின் படி அதிகரித்து இருக்கின்றது. இவ்வாறான விடயங்கள் எல்லாம் அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் செய்யக் கூடிய மிகப் பெரிய அநியாயமாகவும் துரோகமாகவும் இருக்கின்றது. இவ்வாறான விடயங்களை விடுமாறு அல்லாஹ் பொதுவாக திருமறையில் “அழிவின் பக்கம் உங்களை போட்டுக் கொள்ள வேண்டாம்” என தெளிவாகச் சொல்கின்றான். இதன் இறுதி முடிவு என்னவாக அமையும் என்றால் தோல்வியே தவிர கிடையாது. மேலும் கேவலமான விடயங்களைச் செய்து தனது வாழ்கையில் கண்ணியத்தை இழந்து விடுகின்றான்.

மற்றும் அவனது மரணம் வரைக்கும் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இன்னும் மார்க்கத்திற்கு முரணான செயற்பாடுகள் அனைத்தையும் செய்யும் போது ஈமானுக்கு பதிப்பை ஏற்படுத்துகின்றது இப்படியான பாவங்களை விட்டும் நல்லமல்களைச் செய்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற்ற சமூகமாக வாழ அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள் புரிவானாக! ஆமீன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.்.தஸிலாக்கள் பற்றிய ஓர் ஆய்வு

M.I. Ilham Jazeel,Grade-5

எமது மார்க்கமான புனித இஸ்லாம் சக்தி வாய்ந்த கொள்கையையும் உன்னதமான கிரிகைகளையும் உள்ளட க்கிய ஒரு மார்க்கமாகும். நபி(ஸல்) அவர்களின் காலத்திலோ அல்லது ஸஹாபாக்களின் காலத்திலோ இஸ்லாமிய கொள்கைகள் நூலுருவில் ஆக்கப்பட வில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்ததாலும் ஸஹாபாக் கள் தமக்குத் தேவையான கொள்கை விளக்கங்களை நபி (ஸல்) அவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொண்டதாலும் அதற்கு அவசியம் எற்படவில்லை. நபி(ஸல்) அவர்களுக்குப் பின் தோன்றிய நான்கு கலீபாக்களுடைய காலப்பகுதியும் இவ்வாறே அமைந்தது.

இவர்களுக்கு பின்வந்த காலப் பகுதியிலே தான் இஸ்லாத்திற்கு மத்தியில் பிரிவுகளையும் குழப்பங் களையும் ஏற்படுத்த சிலர் முயன்றனர். இதன் விளைவாகவே இஸ்லாத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இவ்வாறு இஸ்லாத்திற்கு எதிராக தோன்றிய இயக்கங்களில் ஒன்றுதான் ''மு.்.தஸிலா'' என்ற இயக்கமாகும். இந்த இயக்கம் 2ம் நூற்றாண்டில் எமது ஹிஜ்ரி கணக்கின்படி 105-110 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றியதாக வரலாறுகள் குறிப்பிடு கின்றன.

இமாம்கள் வரிசையில் இமாம் ஹஸனுல் பஷரி (ரஹ்) அவர்கள் இஸ்லாத்திற்காக வேண்டி மிக மகத்தான பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் கலாபீடத்தை அமைத்து அதிலே பாடப்போதனையும் செய்து வந்தார்கள். இமாமவர்களின் கலாபீடத்தில் கல்வி பயின்ற ''வாஸில் இப்னு அதா'' என்பவன் குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை ஒதுக்கி வைத்து விட்டு பகுத்தறிவுக்கு முதலிடம் கொடுத்து இமாமுடன் விவாதம் புரிய ஆரம்பித்தான். இதன் விளைவாக இமாமவர்களிடமிருந்து பிரிந்து சென்று மூலையில் போய் உட்காரும் நிலை ஏற்பட்டது. இதைக் கண்ட இமாமவர்கள் ''இ.்.தஸல அன்னா'' வாஸில் எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்ற வார்த்தையை கூறினார்கள். இக்கட்டத்தி லிருந்து வாஸிலைப் பின்பற்றிச் சென்ற அனைவருக்கும் ''மு.்.தாஸிலாக்கள்'' என்று பெயர் சூட்டப்பட்டது. இவர்களின் தலைவனாக ''வாஸிஸ் இப்னு அதா'' என்பவன் காணப்பட்டான். இவன் தன்னை பெரிய அறிஞனாக கருதிக் கொண்டு தனது வாதத்தை மக்கள் மத்தியில் முன்வைத்து மக்களின் கவனத்தை தன் பக்கம் திருப்பினான். இதனால் இஸ்லாத்திற்குள் புதிதாக நுழைந்தவர்கள் மற்றும் இஸ்லாத்தை சரிவர அறியாத வர்கள் அவனுடைய கொள்கையின் பக்கம் சாரை சாரையாக நுழைய ஆரம்பித் தார்கள். அக்காலத்தில் இந்த இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக காணப்பட்டது.

மு.்.தஸிலாக்கள் சமயக் கொள்கையில் சுன்னத் வல் ஜமஅத்துக்கு ஒத்ததாக இருந்தாலும் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட விடயங்களை பொய்ப்பித்து குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் முரணான கோட்பாடுகளை வகுத்தனர். இன்னும் அந்தக் கோட்பாடுகளைக் கொண்டு இஸ்லாத்திற்கு எதிராக செயற்பட்டு இஸ்லாத்தை கலங்கப் படுத்தியதுடன் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தினார்கள்.

மு.்.தஸிலாக்கள் சில கொள்கைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள்.

1. பகுத்தறிவைக் கொண்டு அல்லாஹ்வுக்கு உண்டான பண்புகளை (ஸிபாத்துகளை) முற்றிலும் மறுத்தல் இந்த கோட்பாட்டை ஜஹ்மிய்யாக் களும் முன்வைப்பதனால் இவர்களும் ஜஹ்மிய்யாக் களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

2. அல்லாஹ் நீதியானவன் நல்லமள்கள் அல்லாஹ்விடமிருந்து உண்டாகிறது கெட்டமல்கள் அல்லாஹ்விடமிருந்து உண்டாவதில்லை மாறாக, ஷைத்தானிட மிருந்தே உண்டாகிறது. மேலும், அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய பேச்சாக இல்லை மாறாக அது மற்றவை களைப் போன்று படைக்கப்பட்டது. இந்த கோட்பாட்டினை கத்ரிய்யாக்களும் முன்வைப்பதனால் இவர்களும் கத்ரிய்யாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படு கிறது.

3. வழிப்பட்டவனுக்கு நன்மையும் பாவிக்கு தண்டனையும் வழங்குவது அல்லாஹ்வின் மீது கடமை.

4. பெறும் பாவம் செய்தவன் மு.்மினுமல்ல காபிருமல்ல அவ்விரண் டிற்கும் இடைப்பட்டவன்.

5. நலவுகளைக் கொண்டு ஏவுவதும் தீமையை கொண்டு தடுப்பதும் அவசியம். இந்தக் கோட்பாடு சுன்னத்வல் ஜமாஅத்துக்கு நேர்பட்ட கோட்பாடாக இருந்தாலும் மு.்தஸிலாக்கள் அவர்களு க்கு மாற்றமான கருத்துக்களை கூறுகின்றனர். ஊதாரணமாக:- இஸ்லாமிய ஆட்சிதலைவர் தவறுக்கு அப்பாற்பட்ட வராக இருக்க வேண்டும். அவர் தவறு செய்தால் அவரை விட்டு பிரிந்து சென்று விட வேண்டும் என்பது போன்ற முரணான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இன்னும் மு.்தஸிலாக்கள் தங்களை ஏகத்துவவாதிகள் எனக் கூறிக்கொள் வதுடன் தங்களுக்கென சில பெயர்களையும் வைத்து கொண்டனர்.

1. மு.்தஸிலா :- கெடுதியை விட்டும் பாவத்தை விட்டும் பிரிந்தவர்கள் என எண்ணி இப் பெயரை வைத்துக் கொண்டனர்.

2. அஹ்லுல் அத்லி வத் தவ்ஹீத்

3. அஹ்லுல் ஹக்

போன்ற பெயர்களை தங்களுக்கு வைத்து கொண்டனர்.

இவ்வாறு இவர்களுடைய செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனை கட்டுப்படுத்துவதற்காக இவர்களுடைய கோட்பாடுகளுக்கு எதிராக இமாம் ஹஸனுல் பஷரி (ரஹ்) தன்னால் முடிந்த அளவு முயற்சி செய்தார்கள்.

இமாமவர்களுக்கு அடுத்தபடியாக தோன்றிய அபுல் ஹஸன் அல் அஸ்அரீ (ரஹ்) அவர்களும் குர்ஆன் ஹதீஸ்களுடைய ஆதாரங்களைக் கொண்டு அவர்களு டைய கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதன் மூலம் இஸ்லாமியக் கொள்கையில் ஊடுருவல் செய்தவர்களை தெளிவாக இனங்காட்டி னர்கள். இவ்வாறான பல இமாம்களின் அளவிலா முயற்சிகளின் காரணமாக மு.்தஸிலாக்களின் உண்மை நிலவரம் உலகுக்கு உணர்த்தப்பட்டதுடன் அவர்களது கொள்கை வளர்ச்சிற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஆனால் இன்றைய இஸ்லாமிய சமூகம் எது உண்மை? எது வழிகேடு? என்பது பற்றி தெரியாமல் கண்முடித்தனமாக பிறரது கருத்துக்களை உள்வாங்கி தங்களது ஈமானுக்கு தாங்களே உளீ வைக்கின்றனர். எனவே, அல்குர்ஆன், நபிகளாரின் ஸுன்னா கூறும் நேரான வழியைப் பின்பற்றி உயர்ந்த சுவனத்தை பெற முயற்சிப்போம்"

---

## பொன் மொழிகள்

➤ அறியாமை வாழ்வின் மரணமாகும்.

➤ பிறரை கட்டுப்படுத்துபவன் வீரனல்லன், தன்னை தானே கட்டுப்படுத்து பவனே வீரனவான்.

➤ ஒழுக்கம் மனிதர்களின் கேடயமாகும்.

➤ சிந்தனை விசாலம் ஆகிவிட்டால் பேச்சு குறைந்து விடும்.

➤ முறிந்து போன பிறகும் வேலை செய்யக்கூடிய ஒரே இயந்திரம் மனித உள்ளம் மட்டுமே.

➤ மனிதனின் முயற்சி மலையையும் தகர்க்கும்.

➤ முயற்சி மனிதனின் எழுச்சிக்கு வழிவகுக்கும்.

➤ புத்திசாலிக்கு சமிக்கினை ஒன்று மட்டும் போதும்.

**FM.Safee, Gread - 2**

---

➤ உலங்கு வானூர்தியைக் கண்டு பிடித்தவர் யார்?


♦ இடெனி ஓம்ச்சென்

♦ நாடு : பிரான்ஸ்

♦ ஆண்டு : 1924


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக் கதிரவன் ஓய்வெடுக்க மேற்திசையில் மறையத் துவங்குகிறான். மெயின் வீதியில் வாகனங்கள் குறையத் துவங்குகின்றன. தூரத்திலே வெள்ளைத் தம்பி ரைஸ் ஸ்டோரிலே தன்னந் தனியே ஓர் உருவம் அரிசி மூட்டைகளை தூக்கி அடுக்கிக் கொண்டிருக்கிறது.




அது வேறு யாருமல்ல, அன்றாடம் உழைப்பை நம்பி வாழுகின்ற உழைப்பாளர் வர்க்கத்தைச் சேர்ந்த முஸ்தபா நாநா தான். ''அப்பாடா நூறு மூட்டையும் முடிஞ்சுது. இன்னொரு முறை எண்ணிப் பார்த்திடுவோம்'' என்றவாறு மூட்டைகளை எண்ணி முடித்து விட்டு ஸ்டோர் கதவையும் மூடி விட்டு பைசிகளில் வீடு நோக்கி விரைகிறார். இடையில் மக்ரிபுடைய அதான் ஒலிக்க றஹ்மத் பள்ளியில் தொழுது விட்டு செல்கிறார். வீட்டுக்குச் செல்ல இன்னும் இரண்டு சந்திகள் கடக்க வேண்டும். வழியில் இருந்த அஹமது போடியாரின் கடையை கடந்த போதுதான் ''வீட்டிலே உணவுக்கு என்ன இருக்கிறதோ?'' எனும் வினா ஆழ் மனதிலிருந்து ஒலிக்கிறது.

தன் மனைவியும் இரண்டு பெண் மக்களும் காலை முதல் இது வரை சாப்பாட்டிற்கு என்ன செய்து இருப்பார்கள் எனும் எண்ணம் வர பதரியே போகிறார். பொக்கட்டைத் தடவிப் பார்கிறார். காலையிலே சாப்பாடிற்கென எடுத்துச் சென்ற முப்பது ரூபாய் மாத்திரமே அதில் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு அரைக் கிலோ கோதுமை மா வாங்கிக் கொண்டு ரொட்டியாவது செய்து சாப்பிடுவோம் என்ற எண்ணத்தோடு, பைசிகளில் ஏறி சிறு தூரம் சென்றிருப்பார். திடீரென அன்று நடந்த சம்பவம் நினைவுக்கு வந்து தொல்லை செய்கிறது.

சுப்ஹுத் தொழுது விட்டு வீட்டுக்கு வந்து விராந்தயில் கிடந்த ஒற்றைக் கால் உடைந்த சாய்மனையில் வந்தமர்ந்தார் முஸ்தபா. கதிரை ஒரு பக்கம் சாயத்துவங்கவே ஒருவகையாக சமாளித்து உட்கார்ந்து கொள்கின்றார். மூன்று நாட்களுக்கு முன் வாங்கிய மண்டியில் சுடு தண்ணீரை ஊர வைத்து தேனீர் என்ற பெயரில் ஒரு கப்பிலே ஊற்றி ''இந்தாங்க தேயில'' என்றவாறு மனைவி நீட்ட, வேண்டா வெறுப்பாக அதை வாங்கிக் குடித்து நேரத்தோடு சென்றால் தான் ஏதாவது வேலை தேடலாம் என்ற எண்ணத் தோடு நேற்றய வருமானத்தின் அரைப்பங்கான முப்புத ரூபாவைக் காலைச் சாப்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு மதியம் ஏதாவது கொண்டு வருகிறேன் என்று மனைவியிடம் கூறி விட்டு மெயின் வீதி நோக்கி விரைகிறார்.

மதியம் பண்ணிரன்டு வரை எந்த வேலையும் கிடைக்க வில்லை. புசி வேறு வயிற்றைக் கிள்ளியது. குனிந்து பக்கட்டைப் பார்க்கிறார். முப்பது ரூபாய் எட்டிப் பார்த்தது. ஆனால் மாலை வரை தொழில் ஏதும் இல்லையென்றால் இதையாவது வீட்டுக்கு கொண்டு போவம் என்ற எண்ணத்தோடு அதை அப்படியே வைத்து விடுகிறார்.

சுமார் இரண்டரை மணி இருக்கும் வீதியோர மின் கம்பத்தில் சாய்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தவரை "முஸ்தபா.." தம்பி முஸ்தபா.."என்ற வெள்ளைத் தம்பி ஹாஜியாரின் குரல் விழிக்கச் செய்கிறது. பாதி விழித்த நிலையில் இருந்த அவரிடம் ''தம்பி முஸ்தபா மூனு மணிக்கு என்ட ஸ்டோருக்கு நூரு மூட்டை அரிசி வரும் கொஞ்சம் இறக்கி அடுக்கி வெச்சிடு. ''இந்தாசாவி" நான் நாழு மணிக்கு வரேன் ''என்றவாரே மோட்டார் சைக்கிலை முறுக்கிக் கொண்டு சென்று விட்டார்.

மூனு பத்து மட்டுல லொறி வந்தது. அவசர அவசரமா ஸ்டோரை திறந்து மூட்டைகளை துக்கி அடுக்கத் தொடங்கினார். ஒரு 500 ரூபாய் கிடைக்கும் நல்ல கறி ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேணும். மூத்தமகள் மூனு நாளா கணித கொப்பி வாங்கி கேக்குறா." கட்டாயம் வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்தோடு மும்முரமாக வேலையில் ஈடுபடுகிறார்.

சுமார் நாளரை மணியளவில் எண்பத்து ஓராவது மூட்டையை அடுக்கிக் கொண்டிருந்த அவர் யாரோ பின்னால் நடந்து வரும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார் வெள்ளைத் தம்பி ஹாஜியார் தான் வந்தார். வந்தவர் ''ஆ" இன்னும் இருபது மூட்டை தான் மிச்சம் இருக்குபோல ''நான் காசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரல நாளைக்கு வீட்ட வந்து வாங்கிட்டு போ" மறக்காம பூட்டை பூட்டிட்டு போ" என்றவாறு பூட்டிலிருந்த சாவியை உருவி எடுத்துக் கொண்டு பதிலை கூட எதிர் பார்க்காமல் மோட்டார் சைக்கிலை எடுத்துக் கொண்டு விரைந்தார்.

ஆசைகள் கீழே விழுந்த கண்ணாடி போல நொருங்கிப் போக ஆல மரத்தடி சந்தியால் வெள்ளைத் தம்பி ஹாஜியார் மறையும் வரை அவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். வேறன்ன செய்ய முடியும்? பெறு மூச்சு விட்டபடி வேலையை தொடர்ந்தார் சற்று தூரத்தில் ஹோன் சத்தம் கேட்டு திடுக்கிட்டவராய் சுய நினை வுக்கு மீன்டவரிடம் ''என்ன நாநா? யோசனையா? பாத்துப் போங்க" என்ற வார்த்தைகளோடு கடந்து சென்றார் பக்கத்து வீட்டில் ஆட்டோ வைத்திருக்கும் சுபைர்த் தம்பி. திரும்பிப் பார்க்கிறார் வீட்டிற்கு இன்னும் 5 அடி தூரம் தான் இருக்கிறது.

''அல்லாஹு அக்பர்". அல்லாஹு அக்பர்.." இஷாவுடைய அதான் விண்ணைப் பிளக்கிறது. தொழுது விட்டு வருவோம் என்ற எண்ணத்தோடு கோதுமை மாவை வீட்டிலே கொடுத்து விட்டு பள்ளி நோக்கி விரைகிறார். தொழுகை முடிந்து வீட்டுக்கு வருகிறார். மனைவி சுட்டு வைத்த கோதுமை ரொட்டியை அன்றைய தினம் நடந்த சம்பவத்தை கூறியவாறு கவளையோடு சாப்பிட்டு விட்டு அரை வயிற்றுடன் குடும்பமே உறங்கச் செல்கிறது.

இதே நேரம் ''என்னம்மா கோழி பொறிக்கலயாமா? என வெள்ளைத் தம்பி ஹாஜியின் இளைய மகள் கேட்க ''இல்லை மகள் முட்டை பொறிச்சுயிருக் கேன்" என அவரின் மனைவி பதில் கூற மும்முறமாய் சுவையான உரையாடல் களோடு இரவுச் சாப்பாடு நடக்கிறது. சாப்பாட்டு மேசையை கோழிக் கறியும், முட்டைப் பொறியலும் அலங்கரித்து இருக்கின்றன. இவற்றுக்கு மத்தியில் தன்னையும் சேர்த்துக் கொள்ள ''மகன் வெள்ளிக் கிழமை இரண்டு கோழி வாங்கி ஒன்றைப் பொரிப்போம்" என சமாதானம் கூறியவராகவும்,

''உழைப்பாளியின் வியர்வை வற்று முன் கூலிய கொடுத்து விடுமாறு" கூறிய மா நபியின் வார்த்தையை மறந்தவராகவும் சந்தோ மாய் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் ஹாஜியார்.

---

## கண்டுபிடித்தவர் யார்..? (மினி தகவல்கள்)

- மின் கணனி..
  - AM. டியூரின்
  - நாடு : பிரித்தானியா
  - ஆண்டு:1824

- தீக்குச்சி..
  - ஜோன் பேக்கர்
  - நாடு : பிரித்தானியா
  - ஆண்டு : 1826

- தையல் இயந்திரம்..
  - B. திமோனியர்
  - நாடு : பிரான்ஸ்
  - ஆண்டு : 1829

- கணிப்பொறி..
  - WS. பர்ரோக்ஸ்
  - நாடு : அமேரிக்கா
  - ஆண்டு : 1885

- இறப்பர் டயர்கள்
  - தோமஸ் ஹென்கொக்
  - நாடு : பிரித்தான்யா
  - ஆண்டு : 1846

- அலுமினியம்..
  - சீ. மார்டீன் ஹோால்
  - நாடு : அமேரிக்கா
  - ஆண்டு : 1889

AGM.Nafris, Grade-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிய நபியை என்ன பண்ணுகிறீர்?

மண்ணிலே மடு தோண்டி

பெண்ணினத்தை புதைத்து

மடத்தனத்தால் மாண்டிருந்த

மானிடர்கள் மத்தியில்

தன்னுயிர் நீத்து மண்ணுயிர் காக்கும்

மாண்புதனை மன்னிலே விதைத்த

எம் மாநபியை என்ன பண்ணுகிறீர்?

துன்பம் இழைத்த மூதாட்டி

நோயால் துடித்த வேளையிலே

"இன்னல் இழைக்க காணலயே

ஒரு வேளை நோயில் பின்னி இருக்கக் கூடுமோ"

என்றெண்ணிய அன்பு நபி நாயகம்

அவள் காலடி சென்ற சரித்திரம்

அந்நியரே அறிவீரோ!

கண்ணிலும் மேலான கண்மணியை

கறைபடியா எம் கல்புகளில்

கண்ணியமாய்க் காக்கும் எம் முன்னே

கேவலமாய் வரைகின்றீர் கேலிச்சித்திரம்

நீர் அறிவீரா எம்மாநபியின்

அழகான சரித்திரம்?

அந்நியர்களே,

அண்ணல் நபியைக் கண்ணாய்க் காக்கும்

கண்ணியர்கள் நாம்.

இம்மண்ணிலே அவர் தியாகத்தை

தினம் எண்ணி-கண்ணீர் வடிக்கும்

மாந்தர்கள் நாம்.

புண்ணிய நபியின் பொன்னான வாழ்வை

"இனஸன்ஸ் ஒப் முஸ்லிம்" எனும் திரையால்

மண்ணாக்கி விட்டீரே!

அன்பினால் அரவணைத்த

அன்னையிலும் மேலான

கண்ணிய நபியை

அந்நியர்களே என்ன பண்ணுகிறீர்?

கண்ணீர் விட்டே கூறுகிறோம்

மண்ணாய்ப் போனது

எம்மாநபி வாழ்வல்ல

மண்ணில் வாழும் உம் இனத்தின்

மானம்தான்

MNM. Rahmathullah, Gread-6






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினம் பிரச்சினையும் பின்னனியும்..

I.Safnas, Last Year

பெப்ரவரி 14, இரு மனங்கள் சங்கமிக்கும் நாள், பார்வைகள் முட்டி மோதி, வார்த்தைகள் தடுமாறி, இதயங்கள் இடம் மாறி, காதல் என்ற இலக்கணம் இயற்றப்படும் நாள் என்றெல்லாம் பெப்ரவரி 14 வர்ணிக்கப்படுகின்றது. சிறியவர் தொடங்கி பெரியவர் வரை பெப்ரவரி 14 என்றதும் முதலில் தோன்றுவது காதலர் தினம் (Lover's day) ஆகும். பாவங்கள் நிறைந்த இந்த கால கட்டத்திலே முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கான வர்கள் அல்லர். சமூகத்தில் காட்டுத் தீ போல பரவி வந்து ஈமானிய நெஞ்சங்களையும் பொசுக்கி வருகின்ற மிகப் பெரும் கொடூர நோயாக இது மாறியிருக் கிறது.

காதலர் தினம் என்ற பெயரில் எம் சமூகத்தில் எத்தனை அனாச்சாரங்களும் அசிங்கங்களும் அரங்கேற்றப்படுகின்றன. "அன்பைத்தான் பரிமாறுகிறோம் அதில் என்ன தவறு உண்டு? மார்க்கமும் அன்பை வளர்ப்பதற்கு வழிகாட்டு கின்றதே" என்ற மனோ இச்சைகளை கிளறி விடுகின்றனர். தாம் செய்கின்ற மானக் கேடான செயற்பாடுகளை மறைப்பதற்காக மார்க்கத்தையே போர்வை யாகப் பயன்படுத் தவும் மானங் கெட்ட சில அறிவிலிகள் எத்தனிக்கின்ற வேதனைக் குரிய விடயங்க ளையும் காண்கின்றோம். சமூகத்தின் கண்களாக மதிக்கப்படுகின்ற கல்விக் கூடங்கள் கூட இக் கொடிய தினத்தில் கலவிக் கூடங்களாக மாற்றப்படுகின்ற நிலை இன்று தோன்றி வருகின்றது.

காதலர் தினத்தை முன்னிட்டு விழாக் கொண்டாடுவதும் அன்பளிப்புகள் பகிரப்படுவதும் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் பாடல்கள் கேட்பதும் எம் சமூகத்தின் தலை விதியாய் மாறியிருக்கிறது. வீட்டிலே ஒழுக்கம் பேணி, இல்லத்தரசியாய் மிளிர்ந்து கொண்டி ருக்கும் எம் பெண்கள் கூட இத்தினத்திலே வீதி உலா வருகின்றனர். ''இன்றைக்கு மட்டும் தானே விட்டு விடுவோம்" என்று பேசுகின்ற பொறுப்பற்ற பெற்றோர்தான் இத்தனைக்கும் பதில் கூற வேண்டியவர்கள்.

''மேலும் (நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக! தங்களின் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும், தங்களின் மர்மஸ்த்தானங் களை பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும், வெளியில் தெரியக் கூடியவைகளைத் தவிர தங்கள் அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்." என்றெல்லாம் (24:31) இல் அல் குர்ஆன் கூறிக்கொண்டி ருக்கிறது. ஆனால், இன்றைய சமூகத்தின் நிலைப்பாடு என்ன? குர்ஆன் வழி வாழ்கின்ற ஒரு சமூகத்தையே ஆட்டம் காட்டுகின்ற நாளாக இது மாறிவிட்டது. அந்நிய ஆடவர்களுக்கு தங்கள் அலங்காரங்களை வெளிப்படுத்தி இறைவனின் சாபத்தையும், சமூகத்தின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதிக்கும் பெண்கள் கூட்டத்தை தம் வசம் ஈர்த்துக் கொண்ட காதலர் தினம் இன்னும் எம் சமூகத்தில் மண்டியிட்டுக் கொண்டு கிடக்கின்றது என்பது எம் சமூகம் இன்னும் விடியலை நோக்கி நகர வில்லை என்பதையே பறை சாற்றுகின்றது.

காதலர் தினத்தின் தோற்றம், அதன் பின்னனியை அறிந்து கொண்ட எந்தவொரு சமூகமும் அதனை கலாசாரமாக பின்பற்ற மாட்டாது. அத்தினம் "வேலன்டைன்ஸ் டே" (Valantines Day) என்ற பதம் கொண்டு அழைக்கப் படுகின்றது. சமூகத்தில் இத்தனை அநாகரீகங்களையும், பாதிப்பையும் செலுத்தி வருகின்ற இந்த Valantines யார்? ஏன் இந்தத் தினம் கொண்டாடப்படுகின்றது? என்பது பற்றி நிச்சயம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியமாகும்.

4ம் நூற்றாண்டில் ரோமர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மதச் சடங்கு தான் இந்த Valantines கொண்டாட்டமாம். மனித வரலாற்றில் இதை விட அசிங்கமும் அடக்கு முறையும் நிறைந்ததொரு விழாவை கண்டிருக்கவே முடியாது. இரு இளம் ஆண்கள் ஓர் இளம் பெண்ணை இடுப்பில் அணியும் தோலினால் அடிப்பார்கள். அவ்வாண்கள் ஆட்டுத் தோலை -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையாகவும் நாய்களின் இரத்தங்களினால் கறை படுத்தப்பட்டவர் களாகவும் இருப்பர். அக்காலத்தில் இச்செயல் புனிதமானதாகவும், இந்த இளம் ஆண்கள் புனிதப் புருசர்களா கவும் மதிக்கப்பட்டனர். இவ்விழி செயலை செய்வதனால் அடிபடுகின்ற பெண்கள் தம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப் பார்கள் என்பதுவே இம்மடையர் களின் நம்பிக்கையாக இருந்தது.

**ஆட்டு மந்தைகள் மற்றும் பொருள் வளத்திற்கான "லூப்பர்கஸ்" என்ற கடவுளை கௌரவிப்பதற்காகவே இவ்விழா கொண்டாடப்பட்டது. எனினும், இவ்விழாவானது காலப் போக்கில் மாற்ற மடைந்தது. அதாவது விபச்சார தினமாக உருப்பெற்றது.**

ஆட்டு மந்தைகள் மற்றும் பொருள் வளத்திற்கான ''லூப்பர்கஸ்" என்ற கடவுளை கௌரவிப்பதற்காகவே இவ்விழா கொண்டாடப்பட்டது. எனினும், இவ்விழா வானது காலப் போக்கில் மாற்ற மடைந்தது. அதாவது விபச்சார தினமாக உருப்பெற்றது. இத்தினத்தில் சீட்டுக் குலுக்கள் இடம்பெறும். இக்குலுக்களில் தெரிவு செய்யப்படுகின்ற பெண்னை ஆணுக்கு இன்பத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும் தாரை வார்த்துக் கொடுக்கப்படும். இப்பெண்கள் தங்கள் ஆண்களுடன் ஒரு வருடம் கடத்த வேண்டும்.

இம்மடத்தனமான கொண்டாட்டத்தை (லூப்பர்ஸ் காலியாவை) நிறுத்துவதற்கு கிருஸ்தவ மதம் முயற்சித்தும் தோல்வி கண்டது. எனினும், கி.பி 496 ல் 'பொப் கிளாஸியஸ்' என்ற கிருஸ்தவ மத குருவின் முயற்சியால் பெண்களுக்கு பதிலாக துறவிகள் மாற்றப்பட்டு, அத்துறவியின் வார்த்தைகளை அவ்வருடம் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்று மாற்றப்பட்டது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் துறவியின் பெயர்தான் Valentines ஆகும். ஆனால் இன்று எம் சமூகத்தில் இப் பெயர்தான் மருகலாக காதலுக்கு பயன்படுத்தப் படுகின்றது. 1660ம் ஆண்டு மன்னன் இரண்டாம் சார்ளஸ் இத்தினத்தை மீண்டும் விபச்சார தினமாக மாற்றினான். 1776 இல் பிரஞ்சு அரசு இக் கொண்டாட்டத்தை தடை செய்தது. அதே போன்று இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜேர்மனியிலும் இக் கொண்டாட்டம் ஒழிக்கப்பட்டது. அத்தோடு இங்கிலாந்திலும் "புரித்தான்கள்" என்ற இனத்தவர் பலமாக இருந்த போது இக் கொண்டாட்டம் தடை செய்யப்பட்டது.

இவ்வாறாக, சில நாடுகளில் தடை செய்யப்பட்டும், வேறு சில நாடுகளில் தொடர்ந்தும் கொண்டிருந்த இவ்விழாவைப் பயன்படுத்தி கி.பி 1840ம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த எஸ்தர் A. ஹப்லன்ட் என்பவன் "இத்தினம் அன்பையும் காதலையும் பரிமாறிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டதே" என்ற பொய்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, தனது தொழில் நோக்கத்திற்காக காதலர் தின அட்டையை அச்சடித்து வியாபாரம் செய்தான். இதன் முதல் வருடத்தில் 5000 அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டது. இவனது பொய்ப் பிரச்சாரத்தில் ஏமாந்து போன மக்களே இவ்வாறு அட்டைகளை கொள்வனவு செய்தனர்.

இதுதான் காதலர் தினத்தின் வரலாற்று பின்னணியாகும். ஒழுக்கத்தை யும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வலியுருத்துகின்ற, வழி காட்டுகின்ற இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் எம் சகோதரர்கள் இக்கேவலமான உள்ளடக்கத் தையும் கருத்தையும் கொண்ட இத்தினத்தை காதலர் தினம் என்ற பெயரில் உயிர்ப்பிப்பதை இனியாவது தவிர்ந்து கொள்ள வேண்டும். பொறுப்பு வாய்ந்த பெற்றோர்கள் தம் பிள்ளைகளை பக்குவப் படுத்தி, ஆரோக்கியமான எதிர்கால சமூகமொன்றை உருவாக்கு வதற்காகவும், ஒரு நாள் அல்ல, ஒரு வினாடியாயினும் பாவங்களுக்குத் துணை போகாமல் நடந்து கொள்வது அவசியமாகும். இல்லாவிடின், எம் சமூகம் மீண்டும் ஒரு லூப்பர்ஸ் காலியா தினத்தை அல்லது விபச்சார தினத்தை சந்திக்க வேண்டியி ருக்கும்.

எனவே, நாம் அனைவரும் சிந்தித்து, செயற்பட்டு, இறையோனின் வழி நடந்து ஈருலக வெற்றி பெற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நபி - மாநபி....

அறிவுச் சுடர்

அன்பின் ஆதாரம்

அழகுக்கோர் உதாரணம்

ஆட்சியில் முன்மாதிரி

எம் நபி மாநபி...

நீதியிற் தராசு

நற்குணச் செம்மல்

நம்பிக்கை நாயகர்

நாடறிந்த நல்லவர்

எம் நபி மாநபி...

தெளிவினிற் திங்கள்

வாய்மையில் ஞாயிறு

அகிலத்தாரின் அருட்கொடை

வல்லோனின் முத்திரைத் தூதர்

எம் நபி மாநபி...

நன்றி நவில்கிறேன்

நாயன் அவனிற்கு

அஹமது நபியவரின்

உம்மத்தில் என்னையும்

ஆக்கியதற்காக...

Muhammed Fayas, Grade-3




## இறைவா அருள் செய்திடு..

இல்லாமையிலிருந்து உண்டு பண்ணிய

உள்ளமையாய் உள்ளவனே,

உன்னருள் வேண்டி ஏங்குகிறேன்

என் றஹ்மானே..

அருள் மறையை அருளினாய்

உன் அருளாளே

பொருள் தேடிக் கிடக்கிறேன்

ஒரு மனதாலே..

நல் வழிப்படுத்த நபி வழி வகுத்தாய்

அவ்வழி செல்ல உன்னருள் கேட்கிறேன்

நீ வகுத்த வழியை வழி மறைத்த
கொள்ளையருக்கும்

அருள் செய்தாய் றஹ்மானே..

நான் போகும் வழியைச் சீர் செய்
றஹ்மானே,

அருள் விளக்கு அண்ணலாரின்

அருள் வேண்டும் றஹ்மானே,

உன்னருளால் எமக்கருள் செய்

என் றஹ்மானே..

Abdul Haq, Gread-4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம்

நான் அரக்கர்களின் மருந்தாகவும்
வருவேன்

இரக்கர்களின் ஆயுதமாயும் இருப்பேன்

என் பெயர் சுமந்து வையகத்தில்

பலர் திரிகின்றனர்.......

உலகம் தோன்ற முன்னே நான்
தோன்றினேன்

மானிடரின் சேட்டையைப் பார்த்து நானே
வருந்தினேன்

சாந்தி எனும் பாடத்தைப்

புகட்ட வந்த ஆசானும் நானே.......

நீதி எனும் பாடத்தைப் நிலை நிறுத்தும்

நீதிபதியும் நானே.......

நோயுற்ற உள்ளங்களின் வைத்தியனாகவும்

நான் இருப்பேன்.......

இவ்வனைத்தையும் கொண்ட எனக்கு

இறைவனே வைத்த பெயர்

இஸ்லாம்.

**M.Zakky, Grade-4**

# சீதனம்

வாங்காதே....

வீட்டோடு பெரு நகையும்

காரோடு பங்களாவும்

சீதனம் எனும் பெயரில்

கௌரவமாய் பிச்சையெடுத்து

வீட்டோடு மாப்பிள்ளையாய்

விரும்பியே வாழுகின்ற

வெட்கங்கெட்ட மணமகனே,

சீதனம் வாங்காதே..

நீ கேட்கும் சீதனத்தை

உன் தேவை நிறைவேற்ற

கஷ்டங்கள் சுமக்கின்ற

மணப்பெண் அவள்

உன்னிடம் கேட்டால்

உன்நிலை என்னவாகும்

சீதனம் வாங்காதே..

சீதனம் வாங்காதே

இறையோனை மறவாதே

நல் வழி வாழ்ந்திட்டால் – நீ

நன்மைகள் செய்திட்டால்

எந்நாளும் இன்பமது

உன்னைத் தேடி வந்திடுமே

சீதனம் வாங்காதே..

**AJM. Jafran, Last Year**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா எங்களுக்கு பெருநாளைக்கு உடுப்பு எடுக்க இல்லையா"?

மகள் கேட்கவும்தான் ஹஜ்ஜுப் பெருநாளைக்கு இன்னும் நான்கு நாட்களே இருப்பது நினைவுக்கு வந்தது....

என்னம்மா எங்கட வகுப்பில எல்லாப் பிள்ளைகளும் ஒரு மாதத்துக்கு முதலே பெருநாளைக்கு உடுப்பு எடுத்துட்டாங்க. எங்களுக்குத்தான் இன்னும் நீங்க உடுப்பு எடுக்கல" ஐந்தாம் வகுப்புக்கு பாஸாயிருக்கும் எனது மூத்த மகள் அழாத குறையாகக் கேட்டாள்..




என்னதான் வீட்டு நிலமைகள் தெரிந்திருந்தாலும் எல்லாப் பிள்ளைக்கும் போல் நாங்களும் பெருநாள் கொண்டாட வேண்டும்" என்ற ஆசை அவர்களுக்கும் இருக்கும் தானே? இன்ஷா அல்லாஹ் எடுப்போம்" என்று கூறிய நான் அன்றே, அப்போதே அதை மறந்து போய் விட்டேன். காரணம் கடந்த சில நாட்களாக பெய்த மழையினால் வீட்டுக்குள்ளேயே ஒன்றரை அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்திருந்தது. தண்ணிருக்குள்ளேயே நின்று நின்று கால்கள் புன்னாகிப் போகிருந்தன தொழவதற்கு கூட இடம் இருக்கவில்லை.

"உம்மா நாளைக்குப் பெருநாள் எங்களுக்கு இன்னும் உடுப்பு எடுக்கல்லயா?" திரும்பவும் மகள் கேட்கத்தான் எனக்கு பெருநாள் – ஞாபகமே வந்தது.

இல்லை மகள் வீட்டுக்குள்ளே இப்படி தண்ணி நிற்குத்தானே? எப்படி நல்ல உடுப்பு உடுக்க முடியும்? பெருநாள் உடுப்பு எடுக்காதற்கு காரணம் கூறினேன் நான்..

"இல்ல உம்மா நாங்க உடுப்பு உடுத்திட்டு நல்லா தண்ணிபடாம உசத்திப் பிடிச்சுக் கொண்டு பக்கத்திலிருக்கும் ரினா அன்ரியின் வீட்டுக்கு போகியிருக்கிறோம்..." 8 வயது மகன் விளக்கம் சொல்லவும் பதில் கூற முடியாமல் தவித்தேன்....

"ஒரு தரத்துக்கு மேல் ஹஜ்ஜுக்குப் போரவர்களை முதல்ல சுட்டுத்தள்ள வேண்டும் சுன்த்தான ஹஜ்ஜு என்டு ஒன்டுமில்ல ஹஜ் இஸ்லாத்தின் கடமை, அத ஒரு தரம் செஞ்சா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி...." தன்னுடைய ஆத்திரத்தை, ஒரு தடவைக்கு மேல் ஹஜ் செய்யும் ஹாஜிகள் மீது கொட்டினார் எனது கனவர்.

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்தாவதும் இறுதியானதுமான கடமை அதை நபி (ஸல்) அவர்களே தனது வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க, இங்கே நம்மவர்கள் பேருக்கும், புகழுக்கும், வியாபாரத்திற்குமாக புனித ஹஜ்ஜைக் காரணம் காட்டி விமானமேறுகிறார்கள்.

"ஒரு முறை ஹஜ் செய்து வந்தாலே அவருக்கு (அலஹாஜ்) பட்டம் கிடைத்து விடுகிறதே இறை திருப்தியை நாடி எத்தனை பேர் மக்காவுக்கு செல்கிறாரகள்? அப்படியிருக்கு பல முறை ஹஜ்ஜுக்குப் போய் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கவா போகிறார்கள் இவர்கள்? எனவே ஒரு முறை ஹஜ் செய்த ஹாஜிகள் எல்லோருமாச் சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி அவர்களிடமுள்ள மேலதிக செல்வங்களை இலங்கையில் ஏழ்மையில் வாடும் நம் சகோதர முஸ்லிம்களான, ஏழைகள், அநாதைகள். விதவைகளின் வாழ்விற்காகத் தியாகம் செய்ய முன்வருவார்களானால் இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக இலங்கையில் கையேந்தி வாழும் முஸ்லிம்களை காண முடியாமல் போகும் அல்லவா? நம்முடைய செல்வங்களை தியாகம் செய்ய இன்னும் பல நன்மையான வழிகள் இருக்கிறன என்பதை பலமுறை ஹஜ் செய்யும் ஹாஜிகள் சிந்திப் பார்களா"?

போன வெள்ளிக்கிழமை ஓதப்பட்ட குத்பாவை வீட்டிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். என்ன செய்ய இப்படி எத்தனை குத்பாக்கள் வாரா வாரம்? யார் திருந்தி இருக்கிராரர்கள்?

புள்ள... தங்கச்சி... குரல்கேட்டு என் சிந்தனை கலைந்தது யார் அது? கேட்டபடி தண்ணிக்குள்ளால் நடந்து வெளியே வந்தேன்."

உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" வந்தவர் கேட்க


"5 பேர், ஏன்?" நான் பள்ளி ஸகாத் கொமிட்டியில் இருந்து வாறேன்.

"ஓட்டோவில் அரிசி இருக்கு இறக்கிப் போட்டு பிள்ளைகள் 5 பேரையும் அவங்கட வாப்பா வோட ஓட்டோவில வரச்சொல்லுங்க..."அவர் அரிசியை எடுக்க போனார்.

இங்கே வீட்டுக்குள்ளே இடம் இல்லை... எல்லா இடமும் தண்ணி... அங்க பக்கத்து வீட்டுல தான் இறக்க வேண்டும்.... நான் கூறவே அவரும் அங்கே கொண்டு போய் அரிசியை இறக்கி விட்டு எங்கே பிள்ளைகள்? என்று கேட்டார்..

பிள்ளைகளுக்கு தலைகால் புரியாத சந் தோசம். "நாளைக்கு எங்களுக்கும் பெருநாள்" சொல்லிக் கொண்டே ஓடிப்போய் ஆட்டாவில் ஏறிக் கொண்டார்கள்...

நாங்கள் அறியாப் புறத்திலிருந்து எங்களுக்கு அல்லாஹ் உதவி செய்வான். ஈமான் கொண்டு ஊரை, உறவுகளை, நண்பர்களை, வசதி வாய்ப்புக்களை விட்டு வந்து தனிமையில் தவிக்கும் எனக்கும் அல்லாஹ் இது மாதிரியான பல சந்தர்ப்பங்களில் தன் உதவியை அனுப்பி வைத்திருக்கிறான். எல்லாவற்றையும் ஒரு கணம் என்னிப் பார்த்து விட்டு **அல்ஹம்துலில்லாஹ்**... என்றவாரே ஸுஜூதில் விழுகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன்

கவிதை எழுத நினைக்கிறேன் மனிதனுக்காக..

எழுத மறுக்கிறது பேனா - அவனின் தவறுக்காக..

முயல்கின்றேன். எழுதுகின்றேன் அவனுக்காக.. ஆனாலும்

வடிக்கின்றது பேனா தன் சோகத்தை...

மனிதனுக்கு கவிதை - என்

உள்ளத்தில் பெரும் வதை

கண்களில் அடிக்கிறது அலை- ஏன்?

இப்பாரில் அவன் மனிதனா, மிருகமா? என்று.......

முளைத்தான் களி மண்ணில்

சாதிக்கிறான் அவன் இம் மண்ணில் - சில தருணம்

விதைக்கின்றான் சோதரின் உள்ளத்தில் நஞ்சை.....



வானம் வரை சிந்திக்கின்றான்

வாலிபத்தில் சறுக்குகின்றான் - அவனோ..

இறைவனின் கட்டளையையும் மறுக்கின்றான் .....

நபியின் வழி - அது

அவனது வாழ்வின் ஒளி

இதனை மறுக்கின்றது பாவப் புள்ளி....

இது தான் பாவத்தின் சதி - உலக

வாழ்வின் நியதி.....

இறைவனின் அருள் அவன் வாழ்வில்

ஜொலிக்க, செழிக்க இறைவனை வேண்டி

கண்ணிருடன் முடிக்கின்றேன் .....

MSM. Fayaz, Lastyear



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் செய்த புனிதர்

Abdullah, Grade-3

பெருமைக்குரியவர் என்ற பெயருக்குரியவர்
இறைவன் தூதுவர் எங்கள் இதய நாயகன்
உண்மையானவர் உள்ளம் தூய்மையானவர்

பிறக்கும் முன்னரே தந்தையை இழந்தார்
பிறந்த பின்னரே அன்னையை இழந்தார்
பாட்டனாரது பரிவினில் வளர்ந்தார்
படித்திடாமலே அறிவினிற் சிறந்தார்

இளமை வாழ்விலே வளமது இல்லை
இனிய வாக்கிலே குறைகளோ இல்லை
பழமை வாதத்தை எதிர்த்தவர் வென்றார்
உழைத்து வாழ்வதே உயர்வெனக் கொண்டார்

உண்மைகள் பேசி அல்-அமீன் ஆனார்
நன்மைகள் செய்தே நாயகமானார்
கண்ணியம் காக்கும் தலை மகனானார்
புண்ணியம் செய்தே புனிதரும் ஆனார்

வாழிபத்திலே நேர்வழி நின்றார்
வாணிபத்திலே சீர்வழி சென்றார்
அன்னை கதீஜா நாதனுமானார்
அருள் மிகு இறைவன் தூதருமானார்

மாதவம் செய்ய மலைக் குகை சென்றார்
வானவர் ஜிப்ரீல் வஹீயுடன் வந்தார்
அநீதிகள் இல்லா உலகினை அமைக்க
தூதுவர் நீரே ஓதுகவென்றார்

சத்திய வேதம் திருமறை தந்தார்
இத்தரை வாழ்வோ நிஜமில்லை என்றார்
சிறுமைகள் கொன்றார் பெருமைகள் கண்டார்
மறுமையின் மகிமை நிரந்தரம் என்றார்

ஸலாம் சொல்வோம் ஸலவாத்து சொல்வோம்
பலா பலன்களை படைத்தவன் அருள்வான்
நிலா வானிலும் நித்திலமெங்கும்
உலா வந்திடும் அவர் பெயர் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்...

பத்து மாதம் சுமந்து

பவளம் போல பாதுகாத்து

இரத்தத்தைப் பாலாக்கி

இரணம் தந்த முழுமதியே,

ஆராட்டி சீராட்டி

அன்புக்கு உருவமைத்த

ஆதி ஏகன் அருட்கொடையே-என்

அன்புத்தாயே,

அழுகுரல் கேட்டவுடன் ஓடோடி வந்து

கண்ணே பவளமே என்று

வாய் நிறையக் கூப்பிட்டு

அன்புக்கு வடிவமைத்த என்

அன்புத் தாயே உன் பாதத்தடியில்

சுவனம் தேட விரும்புகிறேன்.

மழலையின் வாயில்

முதல் வார்த்தையாம்

அம்மா என்ற மழலை மொழி கேட்டவுடன்

உலகத்தையே அடைந்து கொண்டது போல்

உன்முகம் இன்பம் அடைகிறது

இரவு பகல் விழித்திருந்து

பாதுகாத்த உனக்கு


என்ன ஈடு செய்வானோ

உன் மகன்..



Muhammed Azmin, Grade - 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குர்ஆனில் கொசு (நுளம்பு)
# ஓர் அதிசயம்

கொசு தோற்றத்தில் மிகவும் சிறியது, அற்பமானது. ஆனால் படைகோலத்தில் அதி அற்புதமானது. இவ் விந்தையான கொசு பற்றி சில தகவல்கள் இதோ.................

* அது பெண்பாலைச் சேர்ந்தது.

* அதன் தலையில் நூறு கண்கள் உள்ளன.

* அதன் வாயில் 48 பற்கள் உள்ளன.

* அதன் உடலில் மாறுபட்ட மூன்று இதயங்கள் உள்ளன.

* அதன் தும்பிக்கை நுனியில் ஆறு அறைகள் உள்ளன.

* அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வேலைகள் உள்ளன.

* அதன் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று இறக்கைகள் உள்ளன.

* X-ray கருவி போன்ற நுன்னிய தர்மோ மீட்டர் பொருத்தப்பட்ட சிகப்பு நிறத்தில் நுண்ணிய கருவி அதனுள் பொருத்தப்பட்டுள்ளது. அதன் வேலை அது மனிதனின் உடலில் இருளில் வந்தமர்ந்து இரத்தத்தை உறுஞ்சும் போது யாரும் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக மனிதனுடைய நிறத்திற்கு ஏற்றவாறு தன் நிறத்தை மாற்றிக் கொள்கிறது.

* மனிதனுடைய மூளையே வியக்குமளவுக்கு அதனிடமுள்ள கூறிய ஊசி முள்ளால் சிறஞ்சியைப் போல இரத்தத்தை உறுஞ்சிக் குடிக்கின்றது. ஆக எப்படிபாய்ந்து செல்கிறது என்று நாம் அறிய முடியாது

* மனிதனின் இரத்த வாசனையை 50 மீட்டர் தொலைவிற்கு அப்பாலிருந்தும் நுகர்ந்து அறிந்து கொள்கின்ற அற்புத ஆற்றலைஅது பெற்றிருக்கின்றது.

* இவையனைத்திற்கும் மேலாக அதன் முதுகில் சாதாரண கண்களால் பார்க்க முடியாத அளவுள்ள மிகச் சிறிய பூச்சி உள்ளது என இன்றைய அறிவியல் கண்டுபிடித்துள்ளது.

இதனைத்தான் அல்லாஹ் தஆலாவின் அருள் மறை பின்வரும் வசனம் பறைசாற்றுகின்றது.

"நிச்சயமாக அல்லாஹ் கொசுவையோ அல்லது அதை விட அற்பமானதையோ (அதன் மேலுள்ளதையோ) உதாரணமாகக் கூற வெட்கப்படமாட்டான்" அல்-பகரா (2:26)

- Ibnu Mashood, Last Year

---

## கை ரேகை

எழுத்தறிவற்றோர்

இடும்

கையொப்பம்......

## மண்ணறை

சொகுசு வசதிகளற்ற

கடைசிப்

படுக்கையறை.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடித்தவர் யார்..? (மினி தகவல்கள்) - தொடர்ச்சி..

- ➢ சீமெந்து..
- ◆ ஜோஸப் எஸ்ப்டீன்
- ◆ நாடு : பிரான்ஸ்
- ◆ ஆண்டு : 1834

- ➢ கையடக்கத் தொலைபேசி..
- ◆ மார்டீன் கோர்ப்பர்
- ◆ நாடு : அமேரிக்கா
- ◆ ஆண்டு : 1973

- ➢ நீர் மூழ்கி..
- ◆ டேவிட் பஸ்னெல்
- ◆ நாடு : ஐக்கிய அமேரிக்கா
- ◆ ஆண்டு : 1776

- ➢ மின்கலம்..
- ◆ எலஸ்ஸான்ரோ வோல்டா
- ◆ நாடு : இத்தாலி
- ◆ ஆண்டு : 1593

- ➢ மூக்குக் கண்ணாடி..
- ◆ பெஞ்சமின் பிராங்லின்
- ◆ நாடு : ஐக்கிய அமேரிக்கா
- ◆ ஆண்டு : 1780

- ➢ அடிமட்டம்..
- ◆ வில்லியம் ஒக்டர்ட்
- ◆ நாடு : பிரித்தானியா
- ◆ ஆண்டு : 1621

- ➢ மோட்டார் வண்டி..
- ◆ G. டிம்லர்
- ◆ நாடு : ஜேர்மனி
- ◆ ஆண்டு : 1885

- ➢ டீசல் இயந்திரம்..
- ◆ ரெடோல் டீசல்
- ◆ நாடு : ஜேர்மனி
- ◆ ஆண்டு : 1895

- ➢ குளிர் சாதனப் பெட்டி..
- ◆ கார்ல போலட்∴ ரய்ட்
- ◆ நாடு : அமேரிக்கா
- ◆ ஆண்டு : 1876

- ➢ வான் குடை..
- ◆ என்ட்ரூ கானரீன்
- ◆ நாடு : பிரான்ஸ்
- ◆ ஆண்டு : 1797


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மின் தூக்கி..
  - ஏலிஸா G. ஓடிஸ்
  - நாடு : அமேரிக்கா
  - ஆண்டு : 1852

- பென்சில்
  - NJ. கொண்டே
  - நாடு : ஜேர்மனி
  - ஆண்டு : 1795

- நெசவு இயந்திரம்..
  - E. கார்ட் வைட்
  - நாடு : பிரித்தானியா
  - ஆண்டு : 1785

- நீராவிக் கப்பல்..
  - ஜோன் பிட்ச்
  - நாடு : அமேரிக்கா
  - ஆண்டு : 1787

**AGM.Nafris, Grade-4**

# ஹைக்கூ..

**நட்பு..**

இதயத்தில் வைக்கப்படாமல்
இதயமாக
வைக்கப்பட வேண்டியது...

**பிரிவு..**

ஒரு தாய்
உணரும்
பிரசவ வேதனை...

**மௌனம்..**

புரியாத-ஆனால்
புரியவைக்கும்
ஒரு செம்மொழி.....

**உலகம்..**

இறைவன்
மனிதர்களுக்களித்த
செங்கம்பளம்...

**நினைவுகள்..**

தினந்தோறும்
கொலை செய்யும்
இரக்கமற்ற கொலைகாரன்...

**கண்கள்..**

பார்வை இல்லாதவன்
எழுதத் துடிக்கும்
கவி வரி...

**ACM.Haleem, Grade-06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# جامعة الفلاح العربية

# ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி

# JAAMIATHUL FALAH ARABIC COLLEGE

## ஜாமிஆவின் இயக்குநர் சபை

**தலைவர்** : அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முஹ்யித்தீன் ஜே.பீ.

**உப-தலைவர்கள்** : அல்ஹாஜ் மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி)

அல்ஹாஜ் கே.எம்.எம். கலீல் ஜே.பீ

**செயலாளர்** : அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி) பீ.ஏ.

**உப-செயலாளர்** : அல்ஹாஜ் கே.எல்.ஏ.எம். ஸலீம் பீ.கொம்.

**பொருளாளர்** : அல்ஹாஜ் மௌலவி ஏ.எல்.எச். பத்றுத்தீன் (பலாஹி)

**உப-பொருளாளர்** : அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அமீர்

**உறுப்பினர்கள்** : அல்ஹாஜ் மௌலவி ஏ.எம். அலியார் (பலாஹி, ரியாழி எம்.ஏ.)

அல்ஹாஜ் எம்.எல்.ஏ. முஹ்யித்தீன் ஜே.பீ.

அல்ஹாஜ் எம்.எல். அப்துல் அஸீஸ்

அல்ஹாஜ் ஏ.எல். பத்றுத்தீன்

அல்ஹாஜ் எம்.ஐ.எம். முனீர்

அல்ஹாஜ் என்.எல்.எம். முபாறக்

அல்ஹாஜ் மௌலவி எம்.எம். முபாறக் (பலாஹி)

அல்ஹாஜ் மௌலவி பீ.எம்.எம். ஹனீபா (பலாஹி)

அல்ஹாஜ் மௌலவி ஏ.எல்.எம். முஸ்தபா (பலாஹி)

அல்ஹாஜ் மௌலவி எம்.எம்.எம். இர்ஷாத் (பலாஹி)

அல்ஹாஜ் மௌலவி எம்.ஏ.சீ.எம். பாஸில் (ஹுமைதீ)

ஏ.எல்.ஆதம்லெவ்வை (பலாஹி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்: **ஜாமிஆவின் விரிவுரையாளர் குழாம்**

ஷைகுல் பலாஹ் மௌலானா மௌலவி அல்ஹாஜ் எம்.ஏ. முஹம்மது அப்துல்லாஹ் ஆலிம் (றஹ்மானி) - அதிராம் பட்டினம் தென் இந்தியா

உப-அதிபர்: அல்ஹாஜ் மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி)

விரிவுரையாளர்கள் :

**(ஷரீஆப் பிரிவு)**

அல்ஹாஜ் மௌலவி ஏ.ஜீ.எம். அமீன் (பலாஹி)

அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி, பீ.ஏ.)

அல்ஹாஜ் மௌலவி எம்.ஐ. அப்துல் கபூர்(பலாஹி, மதனி, பீ.ஏ. )

அல்ஹாஜ் மௌலவி எம்.எம். அப்துர்றஹீம் (பலாஹி)

அல்ஹாபிழ் மௌலவி எம்.ஏ. பறகதுல்லாஹ் (பலாஹி)

அல்ஹாபிழ் மௌலவி ஏ.எஸ்.எம். பைறூஸ் (பலாஹி)

அல்ஹாபிழ் மௌலவி ஏ. சுஜப் (புர்கானி, உமரி)

மௌலவி ஏ.எல்.எம். றிஸ்வி (பலாஹி)

**(அல்குர்ஆன் மனனப்பிரிவு)**

அல்ஹாபிழ் மௌலவி ஏ.ஜீ. கன்ஸுல் இர்பான் (பலாஹி)

அல்ஹாபிழ் மௌலவி ஏ.ஏ. ஸாதிக் அலி (பலாஹி)

அல்ஹாபிழ் மௌலவி எம்.எஸ்.எம். ஸபீர் (பலாஹி)

**(பாடசாலைப் பாடஆசிரியர் குழாம்)**

அல்ஹாஜ் மௌலவி எம்.ஐ. அப்துல் கபூர் (பலாஹி, மதனி, பீ.ஏ.) (இஸ்லாம்)

அல்ஹாஜ் எஸ்.எம்.எம். பஸீர் பீ.ஏ. (அரசியல்)

(ஆசிரியர் மட்/அல்ஹிறா மகா வித்தியாலயம், காத்தான்குடி)

ஜனாப் எம்.ஐ.எம். அன்வர் (தமிழ்)

(ஆசிரியர் மட்/அல்-அமீன் மகா வித்தியாலயம், காத்தான்குடி)

ஜனாப் ஏ.எல். அப்துல் அஸீஸ் (தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முறிவு வைத்தியர், ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஜனாப் ஏ.எஸ்.எம். அஸ்ரப் (கணிதம்)

(ஆசிரியர் மட்/ஸாஹிர் மௌலானா வித்தியாலயம், ஏறாவூர்)

ஜனாப் எம்.ஐ.எம். நிஹால் (கணிதம்)

(ஆசிரியர் மட்/பாலமுனை அஸ்ரப் வித்தியாலயம், பாலமுனை)

ஜனாப் எம்.ஐ.எம்.அஸ்மீர் பீ.எஸ்.சீ (விஞ்ஞானம்)

(ஆசிரியர் மட்/சிவானந்தா தேசிய பாடசாலை, நாவற்குடா.)

ஜனாப் ஏ.எல்.எம். ஹாலித் (சமூகக் கல்வியும் வரலாறும்)

(ஆசிரியர் மட்/அல்ஹிறா மகா வித்தியாலயம், காத்தான்குடி)

ஜனாப் எல்.பிஸ்ருல் ஹக் பீ.ஏ. (ஆங்கிலம்)

ஜனாப் கே.எம்.மஸாஹிம் (கணிணி) (விரிவுரையாளர், MySoft-2U)

**(அலுவலக உத்தியோகத்தர்கள்)**

அல்ஹாபிழ் மௌலவி எம்.பீ.எம். பாஹிம் (பலாஹி) (அலுவலகப் பொறுப்பாளர்)

அல்ஹாஜ் மௌலவி எம்.என்.எம்.நியாஸ் (பலாஹி) (களஞ்சியப் பொறுப்பாளர்)

அல்ஹாஜ் எம்.வை.எம். இஸ்மாயில் (கணக்காளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# جـامـعـة الـفـلاح الـعـربـيـة

# ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி

# JAAMIATHUL FALAH ARABIC COLLEGE

## கிதாபுப் பிரிவு மாணவர்கள் பெயர் விபரம் - 2013

**Grade - 7:-**

- MSM. Fayaz
- AL. Abdul Hafeel
- AJM. Jafran
- MHM. Anas
- MMA. Nusry
- AM. Aseefar
- I. Safnas

**Grade - 5:-**

- MMM. Rifath
- AMA. Zyhry
- IM. Askan
- ZM. Azhar
- LTM. Imath
- MJI. Jazeel

**Grade - 6:-**

- ACM. Haleem
- MNM. Rahmathullah
- MHM. Hamzath
- ASM. Azeez
- SA. Basith
- AGS. Fowzan
- MAM. Asfaq
- AFA. Nabrees

**Grade - 4:-**

- AB. Mushi
- AGM. Nabrees
- MJM. Zabeeb
- ARA. Haiz
- KMA. Zakky
- ARM. Musamsir
- MSM. Sahthi


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Grade - 3 :-**

- MF. Abdur Rahman
- ABM. Fayas
- MAM. Arshsd
- MHIM. Thanveer
- ALM. Azam
- M. Abdullah
- ALM. Sujah
- FM. Hassan
- MIM. Azmin
- MM. Inamul Hasan
- MLM. Laheer
- AA. Mubarrath


**Grade - 2 :-**

- ARM. Aslam
- AG. Muhammed
- MHM. Aashiq
- MA. Najath
- FM. Safee
- JM. Akmal
- A. Muhammed
- KM. Farhan
- J. Rikaz

**Grade - 1:-**

- MAA. Muflih
- MKM. Fayaz
- ASM. Sajath
- MFM. Faris
- MF. Fahim
- MHM. Asarudeen
- JM. Insham
- AC. Falah Ahamed
- S. Ubaidullah
- IM. Ijaz
- ZHM. Hafil
- MM. Ijaz
- AHA. Hasban

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மஸ்ஹருல் பலாஹ் - மாணவர்களின் முயற்சிக்கு எமது பாராட்டுக்கள்..

**இப்பொழுது உங்கள்**
**அனைவருக்குமான தொழில்நுட்ப**
**பாடநெறிகள் - எம்மிடம்..**

**உங்கள் எதிர்கால சவால்களை**
**கம்ப்யூட்டர் அறிவினால்**
**முறியடிக்க - எம்மிடம்**
**வாருங்கள்..**

MySoft 2U
உங்களுக்கே தொழில்நுட்பம்..

விபரங்களுக்கு : 077 55 214 55 | www.mysoft2u.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org